Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 20 சனிக்கிழமை (04.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 308


யாழ். நகரின் லுமாலா மிதிவண்டியின்
ஏக விநியோகஸ்தர்



வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
0212228306
பொதிகள் ஏற்றி
இறக்குவதில்
நம்பிக்கை பெற்றோர்
(C/1630)
வெங்கடேஸ்வரா 125, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




மீண்டும் ஆரம்பம் 06



கையில் கம்பெடுத்தவன் எல்லாம்... 07



தீர்வு கிடைக்குமா? 10





பதில் தேடும் கேள்விகள்... 11



இவருக்கு இடம் 08

# வலுவடைகிறது இந்திய-இலங்கை வர்த்தக உறவு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தக பெறுமதியை எதிர்வரும் 2015ஆம் ஆண்டளவில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கான முதலீட்டு திட்டங்களில் இலங்கையும் இந்தியாவும் உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளதென இலங்கை வந்துள்ள இந்திய வர்த்தக விவகார அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை 3 தினங்களுக்கு இடம்பெறும் த இந்தியா ஷோ கண்காட்சி நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, அந்நிகழ்வில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இந்திய அமைசசர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இந்தியா - இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளராக திகழ்கிறது. இதுவரையில் இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக பெறுமதி 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக அமைந்துள்ளது. இரு நாடுகளுக்கு மிடையிலான வர்த்தக

19 ஆம் பக்கம் பார்க்க

## 'உதயன்' மீதான வழக்கின் மேன்முறையீடு வலுவிழக்கும் நிலை

### சட்டமா அதிபரின் அறிக்கைக்காக அடுத்த மாத இறுதி வரை வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

உதயன் ஆசிரியருக்கு எதிரான வழக்கில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், மேலும் கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் முகமாக உதயன் ஆசிரியர் மீதான வழக்கு 21.09.2012 இற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி ஒருவரை பிரதிவாதியாகச் சேர்க்க முடியாது என்பது தொடர்பிலும், சட்டமா அதிபர் பிரதிவாதியாக சேர்க்கப்படாதது தொடர்பிலும் சட்ட முறையற்ற வகையில் மேன்முறையீடு செய்யப்பட்டது தொடர்பாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டது.

ஒரு நீதிபதியின் கட்டளைக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்படலாம். ஆனால் கட்டளை ஒன்று தொடர்பில் அதாவது நீதி முறை நடவடிக்கை (Judicial

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கிற்கும் பிரிட்டிஷ் எம்.பி.க்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் நேற்று கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள 9 பேர் அடங்கிய பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவினர் இலங்கை ஜனாதிபதி, பாதுகாப்புச் செய

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் வங்கியில் தங்க நகைகள் மாயம்

### வங்கி ஊழியருக்கு விளக்கமறியல்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பல்கலைக்கழக மக்கள் வங்கியில் வைக்கப்பட்டிருந்த நகைகள் காணாமல் போனது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அதே வங்கி ஊழியர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

கோப்பாய் பொலிஸாருக்கு மக்கள் வங்கியிலிருந்த நகைகள் சில காணாமல் போயிருப்பதாக வங்கி முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகத்தின் பேரில் இவ வங்கி ஊழியர் கைது


19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் விரைவில் முடிவுக்கு வரும்

### அமைச்சர் டக்ளஸிடம் இந்திய அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக் கடலில் இந்திய கடற்றொழிலாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல் நடவடிக்கைகளை முடிவிற்கு கொண்டுவர



விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய மத்திய வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ஆனந்த் சர்மா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறுதியளித்துள்ளார்.

இந்தியா, இலங்கை இடையே வர்த்தக உறவுகளை அதிகரிக்கும் நோக்கில் இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தலைமையில் உயரதிகாரிகள், தொழிலதிபர்கள், தொழில் துறை அமைப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட இந்திய உயர்குழுவொன்று நேற்று அதிகாலை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

. நேற்றுக்காலை கொழும்பில் இடம்பெற்ற வரவேற்புபசார நிகழ்வில் இலங்கை வந்த மேற்படி இந்தியக் குழுவினர் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதின் மற்றும் இலங்கைக்கான இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் படுகொலை விசாரணை திருப்தியில்லை

### சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

ஏ.சீ.எப். தன்னார்வ தொண்டர் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

மூதூரில் ஏ.சீ.எப். தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் மனித உரிமைக் கண்காணிப்பகம் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தண்டிப்பதற்கு அரசாங்கம் கூடுதல் முனைப்புக் காட்டத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் படையினர் தொடர்புபட்டமைக்கான வலுவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற போதிலும், அரசாங்கம் குற்றவாளிகளுக்கு இது வரையில் தண்டனை விதிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளது.

2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி ஏ.சீ.எப் நிறுவனத்தில் பணியாற்றிய 16 தமிழர்களும், ஒரு முஸ்லிமும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பிலான

19 ஆம் பக்கம் பார்க்க

## அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஒருநாள் சேவை மூலம் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள உதவுவதற்காக, இன்று சனிக்கிழமையும் ஆட்பதிவுத் திணைக்களம் திறந்திருக்கும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிர்ப்போட்டி 4 உள்ளே பக்கம் 12

## முஸ்லிம்களுக்கு வடக்கில் நெருக்கடி குருநாகலில் ஆர்ப்பாட்டம்

(குருநாகல்)

வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று குருநாகல் தெல்லியகொன்ன பிரதேசத்தில் முஸ்லிம்கள் எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

தெல்லியகொன்ன முஸ்லிம் நலன்புரி அமைப்பு விடுத்திருந்த அழைப்பின் பேரில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக ஆரம்பமான பேரணி, கண்டி வீதி வழியாகச் சென்று பாடசாலை முற்சந்தியில் தமது பேரணியினை நிறைவு செய்து கொண்டன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை மீண்டும் அவர்களது தாயக மண்ணில் மீள்குடியேற்று,

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி

## நெடுந்தீவில் செயல்வடிவம் பெறுகிறது



(நெடுந்தீவு)

மகிந்தசிந்தனை திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள 5000 ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயல்திட்டத்தின் மூலம நெடுந்தீவிலுள்ள யா/நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.கலவன் வித்தியாலயம் மற்றும் யா/நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு நேற்று அங்குரார்ப்பண நிகழ்வு யா/நெடுந்தீவு மாவித்துறை றோ.க.த.கவித்தியாலயத்தில் நெடுந்தீவு கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரத்தினம் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது இந்நிகழ்வுக்கு நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளரும், நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமாகிய தானியேல் றெக்சியன், நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆழ்வாப் பிள்ளை சிறி, ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.தனிநாயகம், ஆசிரிய ஆலோசகர்கள் கு.செல்வகுமார், டோ.யூட்ஸ்கிங் ஆகியோரும், நெடுந்தீவு கிழக்குப்பகுதி கிராம அலுவலர் கோ.சண்முகலிங்கம், நெடுந்தீவு கிழக்கு பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.கமாலியேல்தியாக்குமார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் சி.எட்வேட்ராசா மற்றும் இரு பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர் இந்நிகழ்வில் ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத் திற்கமைய அப்பாடசாலைகளின் அயலில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஐயாயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்வுகள் நடைபெறுவதாகவும் இந்த வகையில் குறிப்பிடப்பட்ட பாடசலைகளில் இவ்வான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வந்திருந்தவர்களிடம் கருத்துக்கள் அறியப்பட்டு அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நன்றியுரையினை மாவிலித்துறை றோ.க.த.க.வித்தியாலய அதிபர் செல்வி அகிலாண்டேஸ்வரி சின்னத்தம்பி நிகழ்த்தினார்.

## வெளியீட்டு விழா

கலைக்கம்பனின் உதிரப்பூக்கள் என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். ஹாட்லிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஹாட்லிக் கல்லூரி முதல்வர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எம்.ஸ்ரீபதி, விமர்சன உரையை மெய்யரசன், ஏற்புரையை கஜிதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (62)

# முறைசாராக் கல்வி

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்ட முறைசாராக் கல்விப் பிரிவினர் பாடசாலைக் கல்வியை நிறுத்திக்கொண்ட மாணவர்களுக்கான முறைசாராக் கல்வி வகுப்பொன்றை ஆரம்பிக்க உள்ளனர்.

கைதடி, மானிப்பாய் வீதியில் இணுவில் கிராமத்தில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபையின் கிறிஸ்தவ சேவா ஆச்சிரம வளாகத்தில் இன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருக்கும் இக் கல்வி வகுப்பில் சிங்களம், ஆங்கிலம், கணிதம், ஆகிய பாடங்கள் போதிக்கப்பட உள்ளதாக அதன் இணைப்பாளர் அம்பிகைபாலன் தெரிவித்தார்.

பாடசாலைக் கல்வியை முடிதுக்கொண்டவர்களும், வளர்ந்தவர்களும், இக் கல்வி வகுப்பில் இணைந்துகொள்வதன் மூலம் மேலதிக அறிவினை வளர்த்துக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (120)

## திருக்குறள் மனனப்போட்டி

கரவெட்டி கோட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு வதிரி திரு இதயக்கல்லூரியில் கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (116)

## நுளம்பு வலைகள் விநியோகம்

வரணி வடக்கு பிரதேச மக்களுக்கான டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வும் நுளம்பு வலை வழங்கலும் கடந்த வாரம் வடவரணி சிமிழ் அம்மன் ஆலய குறண்டிப்பிட்டி பொது மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கிராம அலுவலர் மற்றும் தொண்டர்கள் கலந்துகொணடனர். மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு நுளம்பு வலை வீதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (150)

## அவசர பொதுக்கூட்டம்

மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சுழற்சி முறை மருத்துவ சேவை தொடர்பாக கலந்துரையாட மருத்துவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவசர பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 06 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் நடைபெறும் என்பதை அறியத் தருவதோடு, மருத்துவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.


**கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**තල් පොල් නිශ්පාදන සමුපාකාර(සි ස)සංගමය කිලිනොච්චිය**

KILINOCHCHI PALM DEVELOPMENT CO.OPERATIVE SOCIETY LTD.

A9 வீதி கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. A9කරඩිපෝක්කු හංදිය කිලිනොච්චිය A9 KaradiphokkuJunction,Kilinochchi

## முக்கிய அறிவித்தல்

**கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் கடந்த கால அனர்த்தத்தின்போது இறந்திருந்தால் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் யாராவது இதுவரை காலமும் எமது சங்கத்துடன் தொடர்புகொள்ளாது இருப்பின் எதிர்வரும் 20.08.2012 இற்கு முன்னர் தலைவர், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு எழுத்து மூலம் தங்களது விபரத்தை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

மா.மாயழகு
தலைவர்,
கிளி. ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கிளிநொச்சி.

தொடர்புகொள்ள:- 0217901723
0772066617

(C/1661)






நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா பவனியின போது முருகன் இரதத்தில் தெருவீதி வலம் வரும் காட்சியையும், வேல், ஐராவதம், தக்கன், நவவீரர்கள், இரதம் எனபன ஒன்றன் பின் ஒன்றாக வலம் வருவதையும் காணலாம். (137)




(C/1670)

# சமுர்த்தி நிவாரண விநியோகம்

# கிடைக்காத மக்களுக்கு விசேடநடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரைகள் கிடைக்காத வறுமை நிலையில் வாழும் மக்கள் பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரிக்கு தெரியப் படுத்துமாறும் அதனூடாக தாம் உரிய நடவடிக்கைகளை எடுத்து அவற்றை பெற்றுக்கொடுக்க வழிவகை செய்யப்படும் என சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரி எஸ்.எஸ்மி.ஜெயலத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரண முத்திரைக்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் நடவடிக்கை தற்போது சகல கிராமங்களிலும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இம் மாவட்டத்தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்கள் அனைவருக்கும் சமுர்த்தி நிவாரண விநியோகம் செய்யப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக இச் செயற்பாடு முன்னெடுக்கப் படுகிறது. பிரதேச செயலகமூடாக ஒவ்வொரு கிராம அலுவலர்களினாலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதில் கிராமசேவையாளரினால் பதிவுகளுக்கு உட்படாது தவறவிடப்பட்டால் பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் வறுமையில் வாழும் மக்களுக்கு கிடைக்காமல் போவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனை தவிர்க்கும் வகையில் முத்திரை கிடைக்காத மக்கள் உரிய ஆவணக்களுடன் பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரியிடம் சென்று பதிவுகளை மேற்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (77)

# நல்லூர் முருகனுக்கு இன்று 12ஆம் திருவிழா



## அருட்காட்சியை காண இரு கண்கள்போதாது!

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
காட்சிகள் காண கண்களும் நடக்க கால்களும்
தந்த சண்முகப் பெருமான் எழுந்தருளி
மாலையில் வீதி உலா கண்கொள்ளாக்காட்சி
மேனியெங்கும் தங்க நகைகள் பளபளக்க
பக்தி பஜனை ஒலிக்க முன்னுக்கும் பின்னுக்கும்
நடைபவனி நின் திவ்ய அருட்பேரொளியைக்
கண்டு ரசிக்க இரு கண்கள் போதாது.

-கனகராசா - நல்லூர்-

## நல்லூர் புகழ் பாடுவோம்!

நாளும் நல்லூரை வலம் வந்தே
நல்லூரான் புகழ் பாடுவோம்
வாழும் உரிமைபெற வலம் வந்தே
வண்ண மயில் வாகனன் புகழ்பாடுவோம்
நீளும் துயர் நிறுத்த வலம் வந்தே
நிமலன் வரம் வேண்டி புகழ் பாடுவோம்
ஆளும் நல்லைக் கந்தன் ஆசிபெற
அவனருளால் வாழ்வுபெற புகழ் பாடுவோம்.

-செல்வி.அருள்-கலாநிதி (திருநெல்வேலி)-

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு செல்வி பரமேஸ்வரி கணேசனின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் கே.குகபரன், மிருதங்கம் என்.மாதவன், கடம் எஸ்.சிவசிவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

✡ ✡ ✡ ✡ ✡

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் இன்று விழுத்துணை என்னும் தலைப்பில் எஸ்.கே.வை.தவராசா உரையாற்றவுள்ளார். கலை நிகழ்வுகளில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் அறநெறிப்பாடசாலை ஆகியன பங்குபற்றவுள்ளன. (60)

# ஒலி பெருக்கி அன்பளிப்பு

(வரணி)

வரணி அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு வரணியூர் அடியவர் ஒருவர் அன்பளிப்பாக ஒலி பெருக்கி சாதனங்கள் வழங்கி உள்ளார். இவ்வாலயத்தில் இதுவரை ஒலி பெருக்கி இல்லாததால் விசேட தினங்களில் மட்டும் ஒலி பெருக்கி பயன்படுத்தப் பட்டது.

எனினும் தற்போது பூசை நேரங்களில் ஒலி பெருக்கிபயன்படுத்தக் கூடியதாக உள்ளதாக பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (150)


நல்லூரான் பாதம் பணிந்திடுவோம்

மணங்கவர் டிசைன்களில் தங்க நகைகளை செய்து பெற்றிட நாடுங்கள்

விஷானி நகை மாளிகை





# துர்நாற்றம் வீசும் வடிகால்

(குருநகர்)

ஆறாம் குறுக்கு வீதி வடிகால் ஆறு வாரங்களைக் கடந்தும் இன்னமும் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதால் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் புதிதாகப் போடப்பட்டுள்ள வடிகால் மூடி நிர்மாணத்தின்போது அதனடியில் ஏற்பட்டுள்ள திட்டியின் காரணமாகவே கழிவு நீரோட்டம் தடைப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப் பலதடவை புகார் செய்யப்பட்டும் இன்னமும் வடிகால் துப்புரவு செய்யப்படவில்லை. அதனால் கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு மற்றும் நோய்களைப் பரப்பும் கிருமிகள் பெருகும் அபாயம் தோன்றி உள்ளது. (68)

# தென்னிந்திய கலைஞர்களின் இசை நடனப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர், மற்றும் உத்தியோகத்தர்கள் வடமாகாணம், இந்திய துணைத் தூதரகம யாழ்ப்பாணமும் இணைந்து இலங்கை இந்திய நட்புறவு அமைப்பின் அனுசரணையுடன் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை இசைநடனப் பயிற்சிப்பட்டறை நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன.

இதில் 16ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீமதி அலர் மேல் வள்ளி அவர்களின் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் ஸ்ரீ.பி. உன்னிகிருஷ்ணனின் வாய்ப்பாட்டு பயிற்சியும், மாலை 6.30 மணிக்கு சங்கிலியன் தோப்பில் ஸ்ரீமதி அலர்மேல் வள்ளி அவர்களுடைய நடன நிகழ்வும் நடைபெறவுள்ளது.

18ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ரி.எம். கிருஸ்ணா அவர்களுடைய பயிற்சியும், இசையரங்க நிகழ்வும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு சங்கிலியன் தோப்பில் ஸ்ரீ.பி.உன்னிகிருஸ்ணனின் இசைககச்சேரியும இடம்பெறவுள்ளது.

இவர்களினால் துறைசார் அரங்கப்பயன்பாடு, ஆற்றுகை நுணுக்கங்கள் மற்றும் நுட்பங்கள், தொடர்பான விளக்கங்கள் பயிற்சிப்பட்டறையில் வழங்கப் படவுள்ளன. இதற்கான அனுமதி இலவசம், அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (54)

# வவுனியா தெற்கு வலய மட்ட வணிகப் போட்டி முடிவுகள்

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வவுனியா தெற்கு கல்வி வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் ச.தேவதாஸ் தலைமையில் நடைபெற்ற வலய மட்ட வணிகப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா வெளியிட்டுள்ளார். விபரம் வருமாறு,

வினாடி வினா, தரம் 10

செ. நிதீசன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), த. மதுரா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), சு. கோகிலன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)

தரம் 11

வி. டிலக்சனா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), பா. சுகன்ஜா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), பு. சாகித்தியா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்)

தரம் 12, 13

ப. துசானி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), ஜெ. லுர்பிற்றா லிதர்சினி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), யூ. விசாலினி (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

கட்டுரைப்போட்டி, தரம் 10

த. பிறிடோ (பண்டாரிகுளம் விபுலானந்தாக்கல்லூரி), க. வைஸ்ணவி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), கு. புரட்சிகா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்)

தரம் 11

ஜெனித்தா ஜெனோவா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), என். எம். அப்ராஸ் (வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்), .ச. கம்சா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

தரம் 12, 13

அ. உசா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), பா. சிவதர்சிகா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), எச். எப். றசதா (வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்)

பேச்சுப்போட்டி, தரம் 10

சி. பவதாரணி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), க. வைஸ்ணவி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), எஸ். ரில்வான் (வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்)

தரம் 11

சூ. கவின்மொழி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), பி. கேம்குமார் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), யோ. நிரோசா (தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம்)

தரம் 12, 13

என். சுகன்ஜா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), ப. லிர்சிகா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), சி. சுரேகா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) (160)

# முருங்கைக் கன்றுகள் விநியோகம்

(வரணி)

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவிற்குட் பட்ட வீட்டுத்தோட்ட பயிர் செய்கையாளர்களுக்கு கடந்த வாரம முருங்கைக்கன்றுகள் கிராம அலுவலரால் வழங்கப்பட்டது.

இப்பயனாளிகளுக்கு அண்மையில் விதைதானியங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் பசளை வகைகள் விநியோகமும் இடம் பெற்றது. (150)

ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.
- தந்தை பெரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## உணவைக் குறைத்தால் ஆயுளை நீடிக்கலாம்!

மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். குடி, சிகரெட் என்று தீய பழக்கங்கள் மட்டும் அவனை அடிமைப் படுத்துவதில்லை. நல்ல பழக்கங்கள், நல்லதோ தீயதோ ஏதென்று தெரியாத பழக்கங்கள் போன்றவற்றையும் கூட தொடர்ந்து செய்து வந்துவிட்டால் அதை நிறுத்த முடியாமல் செய்துகொண்டிருப்பது மனிதர் வழக்கம்.

நம் சிந்தனையும் அப்படித்தான். பழகிய சிந்தனைகள் நம்பிக்கைகளிலிருந்தும் மீள முடியாமல் பெரும்பாலும் அதற்குள் வட்டமடித்தே வாழ்ந்து முடித்துவிடுகிறோம். நாம் சிந்திக்கும் தடத்தை மாற்ற முடிவதில்லை அல்லது மாற்ற விரும்புவதில்லை. பழகிய பாதையிலேயே போய்க்கொண்டிருப்போம். புதிய பாதைகளில் திரும்பி நடப்பவர்களைப் பார்த்தாலே நமக்கு ஒவ்வாமைதான் வருகிறது.

பழகியதிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. நம் உணவுப் பழக்கம் கூட அப்படித்தான். காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவதென்று பழக்கப்பட்டிருக்கிறோம். பழக்கப்பட்டதாலேயே அந்தந்த நேரத்திற்குப் பசியெடுப்பதும் பழக்கமாகிவிட்டது. இப்போது இதற்கும் ஆய்வு நடத்தி விட்டார்கள். இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு கட்டாயமும் மனிதருக்கில்லை என்கிறது அந்த ஆராய்ச்சி.

"உயிர் வாழ வேண்டுமானால் தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்த அவசியமும் கிடையாது மூன்று வேளை சாப்பிட்டு பழகி விட்டோம், அவ்வளவுதான்" என்று இதுபற்றி ஆய்வு செய்த அந்த விஞ்ஞானி கூறுகிறார். பிறகு எத்தனை வேளை சாப்பிட வேண்டும்? எத்தனை முறை என்ற கணக்கெல்லாம் இல்லை. எவ்வளவு குறைவாக சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்கிறார் மைக்கல் மோஸ்லி என்ற இந்த விஞ்ஞானி. அவர் சொல்கிற காரணங்கள் மறுக்கக்கூடியதாக இல்லை.

உடல் உறுப்புகள் செயற்பட சக்தி தேவை. அதை வழங்குவது நாம் சாப்பிடும் உணவு. அதில் மாப்பொருள், புரதம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. உணவு சமிபாடடையும் போது இந்த சத்துக்கள் உடலின் இயக்கத்துக்கு எரிசக்தியாக மாறுகிறது. அதிகமான சத்துக்கள் கிடைக்கும்போது உடலில் பல பிரச்சினைகள் உண்டாகிறது என்கிறார் மோஸ்லி. இந்த சத்துக்கள் கலோரி அளவால் அளவிடப்படுகிறது. ஒரு கிராம் புரதம் அல்லது மாப்பொருளில் 4 கலோரி என்றால் கொழுப்பில் 9 கலோரி.

நிறைய சாப்பிடும்போது கலோரிகள் அதிகமாகும். உடலின் தேவைக்கு மேலதிகமான கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி தீங்கு விளைவிக்கும். கலோரிகள் குறைந்த உணவு வகைகளை சாப்பிடும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் மற்றவர்களைவிட அதிக காலம் உயிர் வாழ்வதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர். உடல் உழைப்பு, உடற் பயிற்சி இல்லாதவர்களுக்கு தேவைக்கு மீறிய உணவால் வரக் கூடிய ஆபத்து அதிகம். பசி எடுப்பதாக நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப்பிடுபவர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்கிறார் மோஸ்லி.

முடியாதவர்கள் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நல்லது என்பது அவருடைய யோசனை. உடல் பருமனைக் குறைப்பதற்கு, மூன்று வேளைக்குப் பதிலாக ஆறு வேளை அதே உணவைச் சாப்பிடலாம் என டாக்டர்கள் பரிந்துரை செய்து வருகையில், கலோரிகளில் கவனம் செலுத்தினால் மூன்றுவேளைகூட தேவையில்லை என்ற கருத்து புதிய விவாதத்துக்கு வித்திட்டுள்ளது.

- ஆசிரியர்

# சகல ஆசிரியர்களது விபரங்கள் இணையத்தளத்தில் தரவேற்றம்

(யாழ்ப்பாணம்)

தற்கால தகவல் தொடர்பாடல் உலகிற்கு ஏற்ற வகையில் கல்வித்துறையும் தன் செயற்பாடுகளையும், தரவு முகாமைத்துவத்தையும் கணினிமயப்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் தேசிய, மாகாண, வலய, கோட்ட மட்டத்தில் EMIS அலகுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. EMIS பிரிவின் செயற்பாடுகளில் ஒன்றாக அனைத்து ஆசிரியர்களது சுய விபரங்களும் கணினிமயப் படுத்தப்பட்டு இணையத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர்கள் பார்வையிட்டு தம் தரவுகளைச் சீர்செய்து கொள்ளலாம். இத்தரவுகளின் அடிப்படையிலேயே எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. என பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

சேவையிலுள்ள அனைத்து ஆசிரியர்களது முழு விபரங்களும்

http;//103.29.60.39./tsstest என்ற இணையத்தளத்தில் காணப்படுகின்றது. இவ் இணையத் தளத்திற்குச் சென்று ஒவ்வொரு ஆசிரியரும் தனது சுயவிபரங்கள், கல்வித்தகைமை, தொழில் தகைமை, நியமனம் தெடர்பான விபரங்கள், கோவை விபரம், குடும்ப விபரங்கள், போன்ற விபரங்களைப் பார்வையிடலாம். ஒவ்வொரு ஆசிரியரும் தனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை User Name ஆகவும், தங்கள் வலய திட்டமிடல் பிரிவில் உள்ள EMIS அலகில் பெற்ற Password ஐயும் வழங்கி இணையத் தளத்தில் பிரவேசிக்கலாம். அதில் காணப்படும் ஆசிரியர்களது விபரங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவை ஏற்படின் அம்மாற்றத்தினைச் செய்து இணையத்தினூடாக SUBMIT செய்யுமிடத்து வலய, மாகாண மட்டத்தில் மாற்றங்கள் அவர்களது சுயவிபரக்கோவையுடன் ஒப்பு நோக்கப்பட்டு சரியாயின் தரவுத்தளத்தில் தரவேற்றப்படும்.

ஏற்கனவே EMIS தரவுத்தளத்தில் தங்கள் தரவுகளை தரவேற்றம் செய்ய படிவம் A வழங்காத ஆசிரியர்களின் விபரம் இணையத்தளத்தில் காணப்படவில்லை எனின் அவர்களின் விபரம் New Record என்பதனூடாகச் சென்று புதிய தரவுகளைத் தரவேற்றம் செய்தல் வேண்டும். அத்தரவுகள் வலய மட்டத்தில் செவ்வை பார்க்கப்பட்டு தரவுத்தளத்தில் தரவேற்றம் செய்யப்படும்.

EMIS தரவுத்தளத்தில் தங்கள் தரவுகள் தரவேற்றம் செய்ய படிவம் A வழங்கி அவர்களது விபரங்கள் இவ் இணையத்தளத்தில் காணப்படாதவிடத்து அவர்கள் தங்கள் பெயர், பாடசாலை, ஆள்அடையாள அட்டை இலக்கம், முதல் நியமனத்திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை emisnp@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் மூன்று வேலை நாட்களில் அவர்களது விபரம் கவனத்தில் எடுக்கப்படும். இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாகாண மட்ட EMIS இணைப்பாளர் க.மணிமாறன் (உதவிக்கல்விப்பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு, வடக்கு மாகாணம்) 021 320 2962 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தெடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸாருடன் தகராறில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

(திருநெல்வேலி)

நல்லூர் கோவிலில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருடன் தகராறு செய்த நபர் ஒருவர் யாழ்.நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவில் சூழலில் விசேட கடமையிலிருந்த பொலிஸ உத்தியோகத்தருடன் மது போதையில் ஒரு நபர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணம் நீராவியடியை சேர்ந்த இந்நபர் அதிகளவில் மதுபானம் அருந்தி விட்டு புனித்தன்மை மிக்க ஆலயத்துக்கு வந்தது மட்டுமல்லாமல் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருடன் தகராறிலும் ஈடுபட்டுள்ளார்.

இவரைக் கைது செய்த பொலிஸார் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது எதிர்வரும் 6ஆம் திகதி வரை இவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (137)

## பொதுக்கூட்டம்

(நெடுங்கேணி)

வவுனியா இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி. ஜி.நடராசா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (12)

# துணுக்காய் கல்வி வலயத்தில் பத்து பாடசாலைகள் தெரிவு

(நெடுங்கேணி)

ஜனாதிபதியின் ஐயாயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் ஆரம்பவிழா நேற்று மு/பனிக்கர்குளம் அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது. துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எல்.எம். வெனிற்றன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் இணைப்பாளருமான எஸ்.கனகரத்தினம், சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தினேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து மு/பனிக்கர்குளம் அ.த.க.பாடசாலை, மு/மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை, மு/பனங்காமம் அ.த.க.பாடசாலை, மு/சிறாட்டி குளம் அ.த.க.பாடசாலை, மு/பனங்காமம் பூவரசங் குளம் அ.த.க.பாடசாலை, மு/பாண்டியன் குளம் ஆரம்ப தமிழ்வித்தியாலயம், மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலை, மு/புலுமொச்சி நாதகுளம் அ.த.க. பாடசாலை, மு/அனிஞ்சியகுளம் தமிழ்வித்தியாலயம், மு/வவுனிக்குளம் நாலாம் படிவம் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன. (12)

# நீரின்றி இறக்கும் மீன்கள்

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக குளத்தில் உள்ள மீன்கள் இறந்து வருவதுடன் அதனை அண்டிய பிரதேசங்களில் துர்நாற்றமும் வீசி வருகின்றது.

இந்த வகையில் வவுனியா குளத்தில் இலட்சக் கணக்கான மீன்கள் இறந்துள்ளதுடன் அவை நீண்ட நாட்களாக அகற்றப்படாமையினால் ஸ்ரீநகர், மகாறம்பைக்குளம், காத்தார்சின்னக்குளம், பூந்தோட்டம், அண்ணாநகர் ஆகிய பிரதேசங்களில் துர்நாற்றம் வீசிவருவதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன் வீடுகளில் வசிக்க முடியாமல் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை குளத்தில் உள்ள சிறு நீர் நிலையில் உள்ள மீன்களும் இறக்கும் நிலையில் உள்ளதாக அப்பிரதேசவாசிகள் தெரிவித்ததுடன் அவையும் இறக்குமாயின் மக்கள் பல்வேறு நோய்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியேற்படும் எனவும் தெரிவித்தனர். (160)



**இலங்கையில் தலையீடு செய்த விடயத்தில் ஒரு தேசிய இலக்கு இல்லாதபடியால் அது இராணுவத்தின் சிந்தனைகளை திசைதிருப்ப வழிவகுத்தது. ஒரு வெளிநாட்டு செயற்பாடு வெற்றிபெற தேவைப்படுவது, இராணுவம் மூலோபாயமுள்ள கட்டமைப்பான முடிவுகளை மேற்கொள்ளும் நடைமுறைகளில் நெருக்கமாக ஈடுபடுவதுதான். இந்த அணுகுமுறை இல்லாதபடியால்தான் இந்திய இராணுவம் இலங்கையில் மேற்கொண்ட தியாகம் அர்த்தமற்ற ஒன்றாகிப் போனது.**



# பங்களாதேஷ் மற்றும் வடகிழக்கு இலங்கை: இரண்டு தலையீடுகளின் ஒரு கதை

- கேணல். ஆர்.ஹரிஹரன் கட்டுரையிலிருந்து

1987இல் ஏற்படுத்தப்பட்டதும், ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் என அழைக்கப்படுவதுமான இந்திய - இலங்கை உடன்படிக்கை ஜுலை 29ஆம் திகதியுடன் 25 வருடங்களை நிறைவு செய்கிறது. இலங்கை (1987-90)மற்றும் 1971இல் பங்களாதேஷை உருவாக்கிய கிழக்குப் பாகிஸ்தான் ஆகிய இந்தியாவின் இரண்டு இராணுவத் தலையீடுகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்ற ஒரு இராணுவ வீரன் என்கிற வகையில் இந்த இரண்டு முயற்சிகளிலும் இந்தியாவின் அதிகார சக்தியின் வலியுறுத்தலை ஒப்பீடு செய்ய முடியாதவனாக உள்ளேன்.

இரண்டு அரங்குகளிலும் மற்றும் அந்த நேரத்தில் அந்த இரண்டு நடவடிக்கைகளின் போதுள்ள இந்தியாவின் நிலைப்பாட்டிலும் முற்றான வேறுபாடு இருந்தது. பங்களாதேஷை பொறுத்தமட்டில் நன்கு பயிற்றப்பட்ட இராணுவமான பாகிஸ்தானுடன் நடத்தும் மரபுவழி யுத்தமாக இருந்தது. அதில் இறங்குவதற்கு முன்னர் பலத்த இராணுவ திட்டங்களையும் மற்றும் தயாரிப்புகளையும் இந்தியா மேற்கொண்டிருந்தது. அதற்கு முரண்பாடாக இலங்கையில் இராணுவம் ஆயத்தமில்லாத நிலையில் இருந்தபடியால் தமிழ் கிளர்ச்சியாளர்களுடன் எதிர்க்கிளர்ச்சித் தாக்குதலில் சிக்கிக்கொள்ள



நேர்ந்தது. பங்களாதேஷில் படைகளின் நிலை மிகவும் உயர் மட்டத்தில் இருந்தது. விமானப்படைகளும் மற்றும் கடற்படையினரும் ஒட்டு மொத்த தாக்குதல் திட்டத்திலும் ஒரு பகுதியாகச் செயற்பட்டன. இலங்கையில் முக்கியமாக அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பரவலாக்கப்பட்ட ஒரு காலாட்படை நடவடிக்கையாக இருந்தது.

ஒருவேளை அதிலிருந்த மிகப் பெரிய வேறுபாடாக காலாட்படைகளுக்கு வழங்கப்பட்ட பணி இருந்தது. 1971ஆம் ஆண்டின் போரின் நோக்கம் கிழக்குப் பாகிஸ்தானைக் கைப்பற்றுவதல்ல, ஆனால் கிழக்குப் பாகிஸ்தானிய மண்ணில் சுதந்திரமான பங்களாதேஷ் அரசாங்கத்தை உருவாக்குவதாகும். மாறாக இலங்கையில் இந்தியாவின் இராணுவத் தலையீடு, ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக தமிழ் போராளிகளுக்கும் மற்றும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் உள்ள போராட்டத்தைத் நிறுத்தி போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்த வேண்டிய ஒரு தெளிவற்ற கட்டாயம் இருந்தது. அதில் யாருடனும் யுத்தம் செய்வது பற்றி குறிப்பிடப்படவில்லை.

இந்த இரண்டு பயணங்களுக்கு இடையில் சில ஒற்றுமைகள் கூட இருந்தன. இரண்டிலும் இந்தியாவுக்கு தெற்காசியாவில் அமெரிக்காவின் செல்வாக்கை ஈடுகட்டும் பனிப்போர் பண்புகளை கொண்ட பரந்த மூலோபாய நோக்கங்கள் இருந்தன. கிழக்கு பாகிஸ்தானில் வங்காளிகளும் மற்றும் இலங்கையில் தமிழ் சிறுபான்மையினத்தவரும் தங்கள் உரிமைகளை வலியுறுத்தி நடத்தும் போராட்டங்களுக்கு உதவ வேண்டியது தனது தேசிய ஆர்வமாக உள்ளது என இந்தியா நினைத்தது. இரண்டு தலையீடுகளுக்கு முன்பும் பாதிக்கப்பட்ட சமூகத்தவர்கள் தங்கள் அரசாங்க படைகளுக்கு எதிராக போராட எழுச்சி கொண்டிருந்தனர்.

1971ஆம் ஆண்டு யுத்தம், பாகிஸ்தான் மற்றும் அதன் நட்பு நாடான அமெரிக்கா ஆகியவற்றுக்கு கிழக்கிந்தியாவுக்கான அவற்றின் வழிகளை தடுத்ததன் பயனாக இந்தியாவின் மூலோபாய நோக்கங்களை பாதுகாக்க முடிந்தது. மேலும் பாகிஸ்தானின் அடிமைத் தளைக்குள் இருந்து விடுபட விரும்பிய மக்களின் அபிலாசைகளையும் அது பூர்த்தி செய்யது. யாராலும் சவால்விட முடியாத கிழக்கு பாகிஸ்தானின் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மான் 1971 மார்ச் 26இல் சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்வதற்கு முன்னர் இந்தியா அரசியல் ரீதியாக தலையீடு எதனையும் அங்கு செய்யவில்லை. சுதந்திரப் பிரகடனம் செய்து எட்டு மாதங்களுக்கு மேல் சென்ற பிறகே இந்தியா யுத்தத்தை மேற்கொண்டது.

1971 டிசம்பர் 3முதல் 17 வரை வெறும் இரண்டு வாரங்களே யுத்தம் இடம்பெற்றது. பங்களாதேஷின் சுதந்திர போராட்ட வீரர்களான முக்தி பகினியின் உதவிதான் இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தது. அது பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தலைமைத்துவத்துக்கு ஒரு காணிக்கையாகவும், இராணுவ தலைமை தளபதி,ஜெனரல். மனிக்ஷா அவர்களின் திறமையான திட்டமிடல் மூலம் போரை நடத்தி வெற்றிகண்ட ஒரு வெற்றிக் கணமாகவும் இருந்தது. இந்திய ஆயுதப் படைகள் யுத்தக்களத்தில் சுமார் 3,000க்கும் மேலான உயிர்களை பலி கொடுத்தன, 9,000க்கும் அதிகம் பாகிஸ்தானிய வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 97,000 பேர்கள் கைதிகளாகவும் பிடிக்கப்பட்டனர். தெற்காசியாவில் தனது அதிகாரத்தை வலியுறுத்தி இந்தியா ஒரு வலிமையான செய்தியை வெளியிட்டது, மற்றும் இந்த சாதனையை நாடே பாராட்டியது.

1983இல் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் வெடித்ததின் விளைவாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கியபோதுதான் இந்தியா முதன்முதலாக இலங்கைத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு நெருக்கடியை தணிப்பதில் ஈடுபட்டது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், நிலமைகள் வேறுவேறானவை என்பதை புரிந்து கொள்ளாமலே பங்களாதேஷில் இந்தியாவின் தலையீட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழர்கள் அதிகளவு எதிபார்ப்புகளை கட்டியெழுப்பியிருந்தனர்.

உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாக இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் எதிர்பாராத விதமாக ஆயுதங்களை கைவிட்டு பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைய மறுத்த எல்.ரீ.ரீ.ஈகிளர்ச்சியாளர்களுடன் ஒரு யுத்தத்தில் சிக்கிக் கொண்டது. மூன்று வருடங்கள் நடைபெற்ற போரில் 1,225 இந்திய வீரர்களின் உயிரை விலையாக கொடுத்ததுடன் ஆயிரக்கணக்கான இலங்கை மக்கள் கொல்லப்பட அல்லது காயப்பட நேர்ந்தது. இலங்கையின் ஜனநாயக நடைமுறைகள், உடன்படிக்கையை கட்டியெழுப்பியவர்களுக்கு இரு நாடுகளிலும் கதவடைப்பு செய்ததால் இந்தியாவின் தலையீடு திடீரென முடிவுக்கு வந்தது.

இரண்டு இராணுவத் தலையீடுகளும் இந்தியாவுக்கும் அதன் ஆயுதப் படையினருக்கும் பாடங்களை போதித்துள்ளன. முதலாவதாக அத்தகைய தலையீடுகளுக்கு இயக்கத் திறன் மிக்க தலைமை தேவை. இந்திரா காந்தி அவர்களின் தலைமைத்துவம்தான் 1971ஆம் ஆண்டு அந்த வெற்றியை தேடித்தந்தது என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. மரபுவழியாக ஜவகர்லால் நேருவிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட புகழ் ஒளிக்கு அப்பால் நாடு தழுவிய ஒரு பின்துணை அவருக்கிருந்தது.

அவரது வலிமையான சிந்தித்து செயலாற்றும் எல்லை மீறாத சர்வாதிகாரம், மற்றும் அதை அணுகவேண்டிய வழிகளைக் காட்டிலும் அதன் முடிவுகளைக் கவனிப்பது போன்ற திறமைகள் அவருக்கிருந்தன. அவர் எடுத்த காரியத்தை கைவிடாத தன்மையானவர், கிழக்கு பாகிஸ்தானில் போர் செய்வதற்கு முன்னர் அவர் மிகவும் உறுதியான சர்வதேச நாடுகளின் ஆதரவை கட்டியெழுப்பியிருந்தார். பாகிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்கா அல்லது சீன இராணுவ தலையீடு ஏற்படும் சாத்தியமிருந்தால் அதை எதிர்கொள்வதற்காக அவரிடம் இந்தோ - சோவியத் நட்புறவு உடன்படிக்கை எனும் மாற்று திட்டமும் கைவசம் இருந்தது. இந்தியப்படைகள் உள்ளே நுழைந்ததும் ஜனாதிபதி நிக்ஸன் கண்ணிமைக்க மறந்து போனார், மீதி எல்லாம் வரலாறு.

தனது தாயாரிடமிருந்து ராஜீவ் காந்தி மரபுரிமையாக தலைமைத்துவத்தை பெற்ற நேரத்தில், இந்திரா காந்தியின் தவறான செயற்பாடாக தோற்றம் பெற்றிருந்த தேசிய அவசரகால நிலை கணிசமானளவு அவரது புகழை மங்கச் செய்திருந்தது. ராஜீவ் காந்தி அரசியலில் அப்பாவியாக இருந்தார். அவர் அதிக அனுபவங்களை பெற்றுக் கொண்டதும், அவர் பொறுமையற்ற ஒரு தலைமைத்துவ பாணியை கையாண்டார். நல்ல அனுபவமுள்ள காங்கிரஸ் தலைவரும் அவரது சக அமைச்சருமான பி.வி.நரசிம்மராவ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டாம் என்று வழங்கிய அறிவுரைக்கு அவர் செவிசாய்க்கவில்லை.

நான் ஆகஸ்ட் 1987இல் யாழ்ப்பாணம் வந்திறங்கியபோது, ஜெயவர்தனாவை பற்றி நன்கு அறிந்திருந்த இலங்கையர்கள் சிலர், அவர் இந்தியப் படைகளை எல்.ரீ.ரீ.ஈயுடன் போரிட வைப்பார் என்று எனக்கு எச்சரிக்கை தந்தனர். அப்போது நான் அவர்களை நம்பவில்லை, ஆனால் பின்னறிவு வந்தபோது அவருள் மறைந்திருந்த திட்டம் அதுதான் எனத்தோன்றியது. இந்தியா பின்னாளில் தொடர்ந்தும் நிலைத்திருக்காது என்று எழுதப்படாத வாக்குறுதிகளையும் ராஜீவ் காந்தி வழங்கியிருந்தார். இந்தியத் துருப்புகள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கான ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவினை பிரேமதாஸ விதித்தபோது ராஜீவிடம் மாற்று திட்டம் இருக்கவில்லை.

இரண்டாவது அம்சம் இராணுவம் தொடர்பானது, இலங்கையில் தலையீடு செய்த விடயத்தில் ஒரு தேசிய இலக்கு இல்லாதபடியால் அது இராணுவத்தின் சிந்தனைகளை திசைதிருப்ப வழி வகுத்தது. ஒரு வெளிநாட்டு செயற்பாடு வெற்றி பெற தேவைப்படுவது, இராணுவம் மூலோபாயமுள்ள கட்டமைப்பான முடிவுகளை மேற்கொள்ளும் நடைமுறைகளில் நெருக்கமாக ஈடுபடுவது தான். இந்தஅணுகு முறை இல்லாத படியால்தான் இந்திய இராணுவம் இலங்கையில் மேற்கொண்ட தியாகம் அர்த்தமற்ற ஒன்றாகிப்போனது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோத நிதிச் சுற்றோட்டம் தடுக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்

சட்டவிரோத நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பயங்கரவாத நிதிக் கொடுக்கல்வாங்கல்களை தடுக்கும் நோக்கில் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, சவூதி அரேபியா, மொங்கோலியா ஆகிய நாடுகளுடன் இவ்வாறு இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கைகளின் மூலம் சட்டவிரோதமான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பயங் கரவாத அமைப்புக்களின் நிதி கொடுக்கல் வாங்கல்களைத் தடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியான புரிந்து ணர்வின் மூலம் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க முடியும் என மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்ரேலியா, பெல்ஜியம், பங்களாதேஷ், கனடா, இந்தியா, மலேசியா, தென்கொரி யா, இந்தோனேஷியா, ஆப்கா னிஸ்தான், நேபாளம், கம்போ டியா, பிஜி, ஸ்லோவேனியா, தென் ஆபிரிக்கா உள்ளிட்ட 20 நாடுகளுடன் நிதிப் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தங்களிலும் இலங்கை மத்திய வங்கி கைச்சாத்திட்டுள்ளது.

# ராஜகிரிய பள்ளிவாசல்; மீண்டும் தொழுகை ஆரம்பம்

பௌத்த பிக்குகள் உள்ளிட்ட ஒரு குழுவினரின் எதிர்ப்பை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூடப்பட்ட ராஜகிரிய, ஒபேசபுரவிலுள்ள ஜாமியுல் தாருள் ஈமான் பள்ளிவாசல் மிரிஹான பொலிஸாரின் உத்தரவினை அடுத்து கடந்த வியாழக்கிழமை இரவு திறக்கப்பட்டது.

குறித்த பள்ளிவாசலில் ரமழான் மாத இரவு நேர தொழுகையான தராவீஹ் தொழுகை இடம்பெற்ற போது, சுமார் 50 பேர் கொண்ட ஒரு குழுவினர் தொழுகைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த பள்ளிசாலை சூழ்ந்துகொண்டனர்.

எனினும், பலத்த பொலிஸ் பாதுகாப்பிற்கு மத்தியில் இப்பள்ளிவாசலில் தராவீஹ் தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இச்சமயத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் நேரடி விஜயம் மேற்கொண்டு நிலமைகளை அவதானித்தார்.

இதேவேளை, சிங்கள பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களுக்கு எதிராக செயற்படுவர்களுக்கு எதிராக இதுவரை ஏன அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

பள்ளிவாசல்களுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கையில் பௌத்த மதத்தை பின்பற்றும் சிறிய ஒரு குழுவினரே ஈடுபட்டு வருகின்றனர்.

இச்செயற்பாட்டில் ஈடுபடும் இந்த குழுவினர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் பள்ளிவாசல்களுக்கு எதிராக செயற்படுவர்களை கட்டுப்படுத்தலாம் புனித ரமழான் மாதத்தில் தொழுகை நடவடிக்கையினை தடுக்க முற்படுவது ஒரு மோசமான செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வராமை யானது முஸ்லிம் சமூகத்திற்குப் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

### – இரண்டரை இலட்சம் மலையக தொழிலாளர்களின் –

# ஊழியர் சேமலாப நிதி ஊழலை ஆராய குழு அவசியம்

ஒட்டுமொத்த மலையக ஊழியர் சேமலாபநிதி ஊழல் தொடர்பான குற்றச்சாட்டை ஆராய்வதற்கு சுதந்திரமான ஆணைக்குழு அவசியம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள் ளது. இக்கோரிக்கை அடங்கிய மனுவொன்றை ஐ.தொ.கா செயலரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளிரகுநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது சேவையாளர் சங்கத்தின் ஊடாக குறித்த மனு நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில், மலையக தொழிலாளர்கள் தனது வாழ்நாளை தேயிலை செடிகளுக்கு உரமாக்கி தனது வியர்வை, இரத்தம் அனைத்தையும் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்காக பாரிய அளவில் அர்ப்பனித்தவர்கள்.

சுமார் 250,000 தொழிலாளர்களின் வாழ்வோடு நாம் அசமந்த போக்கில் இருந்து விட முடியாது. அதனால் ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் சகலவற்றையும் அதன் சகல பண கொடுகல் - வாங்கல்களையும் பரிசீலிக்க நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறுகின்ற சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டும். அதன் மூலம் ஒட்டுமொத்த மலையக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியை ஊழலில் இருந்து பாதுக்காக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிவான் அச்சுறுத்தல் விவகாரம் விசாரணை அறிக்கை ஒப்படைப்பு

நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பிலான அறிக்கை சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதிவான் ஜூட்சனுக்கு, அமைச்சர் ரிசாட் பதியூதீன் அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணை அறிக்கை, சட்ட மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.வழக்கு ஒன்று தொடர்பில் அமைச்சர் பதியூதீன் தொலைபேசி மூலம், நீதிவானை மிரட்டியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதன்படி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# காட்டுத்தீயினால் ரயில் சேவை பாதிப்பு

ஹப்புத்தளை பகுதியில் ஏற்பட்டுள்ள பாரிய காட்டுத்தீ காரணமாக கொழும்பு, கோட்டைக்கும் பதுளைக்கும் இடையிலான ரயில் சேவை ஓஹியோவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பட்டிப்பொல - ஓஹியோ ரயில் நிலையத்திற்கு இடைப்பட்ட பகுதியில் இக்காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கையில் விமானப்படையினரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# வெடிகுண்டு மீட்பு

திருகோணமலை கும்புறுப்பிட்டி காட்டில் ஆயிரம் கிலோ எடையுள்ள ராட்சத குண்டு ஒன்றை கண்டுபிடித் துள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குண்டு விமானப் படையின் கிபிர் போர் விமானத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் முகாம் மீது வீசப்பட்டது என்று கூறப்படுகிறது. கிழக்கில் 2006 ஆகஸ்ட் மாதத்துக்கும் 2007 யூன் மாதத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போதே இந்தக் குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்றும் இராணுவத் தலைமையகம் கூறியுள்ளது.

# சோமாலியர்களால் கடத்தப்பட்ட 6 இலங்கையர்கள் குறித்து தகவலில்லை

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட எம்.வி. அல்பீடோ கப்பலிலிருந்த 6 இலங்கையர்களின் நிலைமை தொடர்பில் எதுவும் தெரியவரவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

இலங்கை மாலுமி எங்குள்ளார் என்பது தொடர்பில் கராச்சியிலுள்ள இலங்கைக்கான பிரதிநிதி நாயகமும் வெளிவிவகார அமைச்சும் எதனையும் அறிவிக்கவில்லை.

எவ்வாறாயினும் கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து பணயக்கைதிகளாக பிடித்துவைக்கப்பட்டிருந்த 7 பாகிஸ்தானியர்கள் கராச்சியை வந்தடைவர் என பாகிஸ்தான் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. 7 பாகிஸ்தானிய மாலுமிகளும் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய அதிகாரிகள் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தினர்.

சோமாலிய கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்டிருந்த மலேஷியாவின் தேசியக்கொடியுடனான இக்கொள்கலன் கப்பல் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்ட 22 மாலுமிகளில் 7 பாகிஸ்தானியர்களும் 7 பங்களாதேஷியர்களும் 6 இலங்கையர்களும் ஒரு இந்தியரும் ஒரு ஈரானியரும் அடங்குகின்றனர். 2 வருடங்களுக்கு முன்னர் கப்பல் கடத்தப்பட்டபோது அதிலிருந்த ஒரு இந்தியர் உயிரிழந்துவிட்டார்.

# பெருந்தோட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

(கொழும்பு)

இலங்கை தோட்டத் தொழிலாளர்களின் கல்வி நிதியத்தின் ஊடாக, இந்திய உயர்ஸ்தானிகரகம் வழங்கும் பெருந்தோட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனை எதிர்வரும் எட்டாம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு, இந்திய உதவி உயர்ஸ்தானிகரகம் கோரியுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரம் கற்போர், வெளிவாரி பட்டப்படிப்பு, இளமாணி பட்டதாரிகள், அரசாங்க தொழிற்பயிற்சி நிலையங்களில் பாடநெறிகளை பின்பற்றும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இந்த புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு, கண்டி, நுவரெலியா, பண்டாரவளை, ஹட்டன் மற்றும் பதுளை போன்ற இடங்களில் நடைபெறவுள்ளன.

# கிழக்கு மாகாணசபை ஆட்சியை தீர்மானிக்கும் சக்தி முஸ்லிம்காங்கிரஸ்

(கொழும்பு)

"முஸ்லிம் காங்கிரஸிலிருந்து யாராவது பிரிந்து செல்வார்களாயின் அதற்கு காரணம் தங்களுக்கு அமைச்சுப் பதவிகள் தேவை என்பதுதான். அதே போல் சிலர் கட்சி தொடங்குவதும் முழு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலின் அம்பாறை கரையோரப் பிரதேசத்துக்கான முதலாவது பிரசாரக் கூட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னால் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளரும், கிழக்கு மாகாணசபையின் முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளருமான ஏ.எல்.எம். நஸீர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"கிழக்கு மாகாணசபையின் ஆட்சியினைத் தீர்மானிக்கிற சக்தி முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதை வைத்துக் கொண்டு யாரும் வியாபாரம் செய்ய முடியாது. மக்கள் ஆணையினை அடிப்படையாகக் கொண்டு கட்சிதான் அந்த விடயத்தைத் தீர்மானிக்கும். மக்கள் ஆணையினைக் காவிக் கொண்டு அடுத்த நாள் யாரும் ஓடிவிட முடியாது.

முஸ்லிம் காங்கிரஸை அடிபணிய வைக்க நினைப்போரிடம் நாம் மசிந்து கொடுத்தது கிடையாது. ஆனால், தேர்தல் வெற்றிக்குப் பின்னர் மசிய வேண்டிய நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட வேண்டிய துரதிஷ்டத்தை நாம் அனுபவித்திருக்கின்றோம். ஆனால், இந்தத் தேர்தலுக்குப் பிறகு அதை எதிர்கொள்வதற்கு மக்களைத் தயார்படுத்த வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இணைந்தா தனித்தா போட்டியிடுவது என்று முடிவெடுக்கும் விவகாரத்தின் போது, கட்சிக்குள் பலவிதமான உள்முரண்பாடுகள் தோன்றியிருந்தன. ஆளும் தரப்பினரோடு மிகத் திறந்த மனதோடு நாம் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தைகளின் போதும், அதன் பிறகும் எமது அணிக்குள் ஏற்பட்ட குளறுபடிகளை சமாளிப்பதற்கு நான் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களையெல்லாம் இங்கு கூறமுடியாது.

ஆனால், அவை என்றோ ஒரு நாள் வரலாற்றில் பதியப்படலாம். இருந்தாலும், இந்தத் தேர்தல் முடியும் வரையாவது அவற்றினை பரம இரகசியமாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது.

மக்கள் ஆணையினை அடகு வைத்து விட்டு கபடத்தனமாக யாரும் விளையாட முடியாது என்பதை கட்சிக்குள்ளும், வெளியிலும் இருப்பவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸின் ஊடாக தமது பதவிகளை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது, பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்வது என்கிற எதிர்பார்ப்புகள் பலருககும் இருக்கும். அதற்காக, கட்சி எக்கேடுகெட்டுப் போனாலும் பரவாயில்லை என்று தடியெடுத்தவர்கள் எல்லோரும் வேட்டைக் காரர்கள் ஆகிவிட முடியாது.

இனியும் தேர்தல் முடிந்தவுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் கட்சித் தலைவரைப் பணயக் கைதியாக்கி பந்தயமாடுகின்ற ஒரு கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் இருக்காது.

கிழக்குத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுப் போனால், இந்தக் கட்சியின் தலைவர் தனது பதவியிலிருந்து விலக வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிடுவதென தீர்மானித்தவுடன் கட்சிக்குள் இருக்கும் சிலரே கூறியிருக்கின்றார்கள்.

# முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனத்திற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது



(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச ஒருக்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை அம்பிகை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை அம்பிகை சிக்கனக் கடனுதவி கூடுறவுச் சங்கத் தலைவர் குணசேகரம் தலைமையில் நடைபெற்ற போதே நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்வேறு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று கடந்த கால யுத்தத்தால் சேதமடைந்த கட்டடங்களை புனரமைப்புச் செய்து வருவதுடன் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.


கொடுப்பனவின்றி சேவை நோக்குடன் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் நாம் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், முன்பள்ளி ஆசிரிய நியமனத்தின் போது கல்வித்தகைமை, சேவைக்காலம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நியமனம் வழக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரையினை ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான சிறி ரங்கேஸ்வரன் நிகழ்த்தினார்.

முன்பள்ளி மாணவர்களின் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளுடன் இடைவேளை நிகழ்வாக இசையும் அசைவும் இடம் பெற்றது தொடர்ந்து வெற்றி பெற்ற சிறார்களுக்கான பரிசில்கள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் திருமதி இந்திரன், கிராம அலுவலர் யோகச்சந்திரன் மற்றும் பெற்றோர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ரமழான் சிந்தனை



*இறை விசுவாசம் கொண்டோர்களே!*
*உங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் மீது*
*நோன்பு விதிக்கப்பட்டிருந்ததைப் போல்*
*உங்கள் மீதும் நோன்பு விதிக்கப்பட்டுள்ளது.*
*அதன் மூலம் நீங்கள் இறையச்சமுடையோர் -*
*- ஆகலாம்.*

*(2:183)*

(105)

# நயினாதீவு பிடாரி அம்மன் வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரம் நாவலடி பிடாரி அம்மன் கோவில் வீதி செப்பனிடப்படாமல் மோசமாக சேதமடைந்துள்ளதால் இதனூடாக பயணத்தை மேற்கொள்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதி மணல் வீதியாகக் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அவ்வீதி சேறும், சகதியுமாக காணப்படுவதாகவும், இதனூடாகச் செல்லும் வாகனங்கள் சில சந்தர்ப்பங்களில் விழுந்து எழும்புவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நயினாதீவிலிருந்து வெளியிடங்களுக்கு செல்லும் போது இவ்வீதியூடாகவே மக்கள் செல்ல வேண்டியுள்ளதாகவும் இதுவே பிரதான வீதியாக உள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதி புனரமைக்கப்பட்டால் தாம் இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ள முடியும் எனத்தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் பிரதேச சபை உறுப்பினர் கருணாகர மூர்த்தியிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (175)

# முரசின் இன்றைய பலன்

(04.08.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 20 ஆம் திகதி. துதியை, சித்தயோகம் முற்பகல் 8.02 வரை. நட்சத்திரம் சதயம். மரணயோகம் முன்னிரவு 11.22 வரை. இராகுகாலம் 9.04 - 10.34 வரை. சுபநேரம் 3.04 - 4.34 வரை. எமகண்டம் 1.34 - 3.04 வரை. குளிகன் காலம் 6.04 - 7.34 வரை. கரிநாள்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காரிய சித்தி, உணவில் கவனம், தேவையற்ற வாக்குவாதம் வேண்டாம், புத்திர பாக்கியம். |
| ரிஷபம் | விருத்தி, மறைமுக வருமானம், உறவினர் உதவுவர், கனவுகள் நனவாகும். |
| மிதுனம் | ஸ்தல வழிபாடு, குடும்பத்தில் ஒற்றுமை, புத்திர பாக்கியம், மகிழ்ச்சிகரமான சம்பவங்கள். |
| கடகம் | சந்திராட்டமம் புது முயற்சி கூடாது, வீண்விரயம், கணவர் வீட்டில் மதிப்பு. பதவியுயர்வு. |
| சிம்மம் | மனதில் சலிப்பு, அரச வழியில் உதவி, சுப காரியங்கள், அலுவலகத்தில் அதிருப்தி. |
| கன்னி | தேர்ச்சி, எச்சரிக்கையாக இருக்கவும், புத்திரரால் மகிழ்ச்சி, மேலதிகாரிகள் ஆதரவு. |
| துலாம் | திறமை வெளிப்படல், மன அமைதி குறையும், கல்வியில் கவனம் தேவை, பொறுப்புக்கூடும். |
| விருச்சிகம் | மனத்தெளிவு, ஆரோக்கியம் பாதிப்பு, பொறுப்புக்களால் அழுத்தம், வரவில் தேக்க நிலை. |
| தனுசு | திடீர் நன்மை, சரளமான பணவரவு, தாமதமான வெற்றிகள், வியாபாரத்தில் இலாபம். |
| மகரம் | சிக்கல் நிலை, தடைகளுக்குப் பின் வெற்றி, நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், உடல் ஆரோக்கியம். |
| கும்பம் | நல்லாசிகள், பணியில் சுறுசுறுப்பு, தேவையற்ற பயணம், உறவினர் ஆதரவு. |
| மீனம் | பெருமை, கொடுக்கல் வாங்கல்களில் இலாபம், பந்தயங்களில் வெற்றி, நிதானம் நன்று. |

# பாலங்கள் மீள்புனரமைப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெருந்தெருக்கள் சிலவற்றிலுள்ள குறித்த சில மதகுகள், பாலங்கள் மீளமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி, சாவகச்சேரி - புலோலி வீதி, புலோலி - கொடிகாமம் - கச்சாய் வீதி. ஆகியவற்றிலுள்ள பாலங்களே புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கான நிதி பெருந்தெருக்கள் அமைச்சிலிருந்து வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (54)

# பரமர் சங்கமம்



"கையில் கம்பெடுத்தவன் எல்லாம் சண்டியன்" எண்டது போல இப்ப நம்ம நாட்டு விவகாரங்களெல்லாம் சண்டித்தனப் போக்கில் தான் நடந்து கொண்டிருக்கு.

சண்டித்தனம் நாடாளுமன்ற அமைச்சரவையில் ஆரம்பித்து ஊடகத்துறை வரையும் விரவி வளர்ந்து விட்டது. அமைச்சர் மேர்வின் சில்வாவின் சண்டித்தனம் சகல இடங்களிலும் அரங்கேறின.

ஊடகவியலாளர் சமுர்த்தி உத்தியோகத்தர். முனீஸ்வரம் இந்து ஆலய வேள்வி இப்படிப் பல்வேறு மட்டங்களில் அவரது சண்டித்தனம் அரங்கேற்றப்பட்டன. சிறுது காலம் ஓய்ந்திருந்த அவரது அலை மீண்டும் எழுவதைப் பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்க முடிகிறது.

துமிந்த சில்வா, பாரதரத்தினா ஆகியோரின் சண்டித்தனம் உச்சக் கட்டத்தை அடைந்து ஒருவர் மேல் லோகத்திலும், மற்றவர் கீழ் லோகத்தில் ஒழிந்து கொண்டிருப்பதோடு கிடக்குது. மறைஞ்சவருடைய மோள் இன்னமும் விடுறேல்லை எண்டிருக்கிறாள்.

இப்பொழுது இளம் அமைச்சர் ரிஷாத் பதிதீன் சண்டித்தன முறையில் இறங்கியுள்ள புதிய கில்லாடியாகப் பெயர் பெற்று வருகின்றார். மன்னார் மாவட்ட ஆயரோடு ஆரம்பமான சடுகுடு அப்பகுதி நீதிமன்றம் தாக்கப்படுகின்ற அளவுக்குச் சண்டித்தனம் கோலோச்சுகின்றது.

இந்தச் செய்திகளை வெளியிட்ட ஒரு ஊடகம் நீதித்தலம். நீதிபதி போன்றவைக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் இதுதான் முதல்த்தடவை இல்லை எண்டும் குறிப்பிட்டிருந்தது.

1980 களிலும் இத்தகைய தாக்குதல்கள் நீதிக்கு எதிராக அநீதியாக நடத்தப்பட்டிருந்தது வெளியிடப்பட்டது. ஊடகங்கள் எதற்குமே ஆதாரங்கள் தேடிப்பிடித்து வெளியிட்டு விடுவதில் சூரத்தனம்தான் காட்டுகின்றன.

குடா நாட்டுப் பத்திரிகை ஊடகமொன்று யாழ்.நீதிவானுக்கு அபகீர்த்தி உண்டாக்கும் செய்தி ஒன்றைப் பிரசுரித்ததில் இருந்து யாழ்.நீதிமன்றத்தில் ஏற்பட்ட மன்னிப்புக் கேட்கும் படலம் கொழும்பு மேல் நீதிமன்றம் வரை சென்றுவிட்டது.

மன்னாரில் நீதிமன்றத்துக்கு கற்களால் எறிந்த அன்றோ மறுநாளோ பருத்தித்துறை நீதிவான் இல்லத்திற்கும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

ஜூலை மாதத்தில் மட்டும் இரண்டு மூன்று சம்பவங்கள் நீதி சார்ந்த பகுதியினருக்கு எதிராக மேற்கெள்ளப்பட்டதை ஒன்று கூட்டிப் பார்க்கும் போது சண்டித்தனங்களை இல்லாமல் ஒழிக்கக்கூடிய நீதிக்கு எதிராகவே முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

அதுவும் அமைச்சரவை உறுப்பினர்களின் பின்னணியோடு இந்நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டுள்ளதெண்டால் சட்டங்களைக் கையிலெடுக்க மக்களையும் முந்திக்கொண்டு அதிகார வர்க்கமும் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது.

சட்டம் ஒழுங்கை உருவாக்கி நீதி வழிதீர்வுகளைக் கண்டு வாழ்ந்த நாகரிக சமுதாயம் காட்டுமிராண்டித்தனமான சீரழிவுப் பாதையில் சண்டிப் போக்கில் செல்வது நல்லதுக்கில்லைச் சொல்லுங்க பாப்பம்.....

## தகுதி நீக்க எதிரொலி பட்மின்ரனுக்கு முழுக்கு



(பீஜிங்)

ஒலிம்பிக்கில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் இனி பட்மின்ரன் விளையாடப் போவதில்லை என்று சீன வீராங்கனை யூ யாங் தெரிவித்துள்ளார். அவர் சீனாவின் நட்சத்திர வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக இணையதள வலைப்பூவில் அவர் கூறியிருப்பது: இந்த ஒலிம்பிக் போட்டி எனக்கு கடைசிப் போட்டியாக அமைந்துவிட்டது.

சர்வதேச பட்மின்ரன் சங்கத்திடம் இருந்தும், எனது விருப்பத்துக்குரிய பட்மின்ரன் விளையாட்டில் இருந்தும் இத்துடன் விடைபெற்றுக் கொள்கிறேன்.

நீங்கள் இரக்கமற்ற வகையில் எங்கள் கனவுகளை சாகடித்து விட்டீர்கள். இதனை எப்போதும் மறக்க முடியாது என்று சர்வதேச பாட்மின்டன் சங்கத்தின் மீது அவர் குற்றம்சாட்டியுள்ளார். யூ யாங்கின் இந்த முடிவு அகங்காரத் துறவு என சீன பட்மின்ரன் ரசிகர்கள் வர்ணித்துள்ளனர்.

26 வயதாகும் யூ யாங், வாங் சியோலி-யுடன் இணைந்து ஒலிம்பிக் மகளிர் இரட்டையர் பட்மின்ரனில் பங்கேற்றார்.

தனது கடைசி லீக் ஆட்டத்தில் இவர்கள், தென்கொரிய ஜோடியிடம் வேண்டுமென்றே தோல்வியடைந்தது தெரியவந்தது. இதையடுத்து இவர்கள் ஒலிம்பிக்கில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

இவர்கள் தவிர தென்கொரியாவைச் சேர்ந்த 4 வீராங்கனைகளும், இந்தோனேசியாவைச் சேர்ந்த இரு வீராங்கனைகளும் இதே குற்றச்சாட்டில் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர். அதே நேரத்தில் தங்கள் நாட்டு வீராங்கனைகள் நீக்கப்பட்டதை சீன ஒலிம்பிக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

தங்கள் நாட்டு வீராங்கனைகளின் செய்கை தங்கள் மனதைப் புண்படுத்தி விட்டது. அவர்கள் மீது சர்வதேச பட்மின்ரன் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறோம் என்று சீன அரசின் செய்தி நிறுவனமும் தெரிவித்துள்ளது.ஒலிம்பிக்கில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட 8 வீராங்கனைகள் மீதும் சர்வதேச ஒலிம்பிக் சங்கம் அடுத்த கட்ட நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

## மைக்கல் பெல்ப்சிற்கு ஒபாமா வாழ்த்து



(லண்டன்)

ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கம் (20) வென்று வரலாறு படைத்த அமெரிக்க நீச்சல் மன்னன் மைக்கல் பெல்ப்சிற்கு இன்ப அதிர்ச்சி. இவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாராட்டியுள்ளார் அந்நாட்டு அதிபர் ஒபாமா. இது குறித்து பெல்ப்ஸ் கூறுகையில், எனக்கு திடீரென அழைப்பு வந்தது. தொலைபேசியை எடுத்தேன். மறுமுனையில் பேசியவர், மைக்கேல் தானே எனக் கேட்டார். ஆம் என்றேன். கொஞ்சம் பொறுங்கள் அமெரிக்க அதிபர் உங்களிடம் பேச வேண்டும், என்றார். அதிர்ச்சியில் ஓகே மட்டும் சொன்னேன். சிறிது நேரத்தில் ஒபாமாவே பேசினார். அப்போது, உங்களது சாதனையை நினைத்து அமெரிக்காவே பெருமைப்படுகிறது. ஊக்கம் அளித்து வரும் உங்களது அம்மாவிடம் என் சார்பில் ஒரு ஹாய் சொல்லி விடுங்கள், என்றார்.



## தங்கம் வென்ற பெல்ப்ஸ்

(லண்டன்)


ஒலிம்பிக்கின் நீச்சல் போட்டிகளில் அமெரிக்க வீரர்களின் ஆதிக்கம் தொடர்ந்து வருகிறது. அதிலும் குறிப்பாக சாதனை வீரரான மைக்கேல் பெல்ப்ஸ் தொடர்ந்து முத்திரை பதித்து வருகிறார்.

நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே நீச்சல் போட்டியில் அமெரிக்காவின்மைக்கல் பெல்ப்ஸ் தங்கப்பதக்கம் வென்றார். பெல்ப்சின் சகநாட்டவரான ரையான் லொச்டே இப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மேலும் ஹங்கேரி வீரரான லஸ்லோ ஸ்செ வெண்கலம் வென்றார்.இப்போட்டியில் தங்கம் வென்றுள்ள பெல்ப்ஸ், இந்த ஒலிம்பிக்கில் வெல்லும் இரண்டாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

மூன்றாவது முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள பெல்ப்ஸ் வெல்லும் 16ஆவது தங்கம் இதுவாகும். மேலும் ஒட்டுமொத்தமாக பெல்ப்ஸ் வென்றுள்ள 20ஆவது பதக்கமாகவும் இது அமைந்துள்ளது.

## காலிறுதிக்குத் தகுதி பெற்றது பிரேசில்



லண்டன் ஒலிம்பிக் ஆண்களுக்கான கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு பிரேசில் அணி முன்னேறியது. லண்டன் ஒலிம்பிக் ஆண்களுக்கான கால்பந்து சி பிரிவு கடைசி லீக் போட்டியில் பிரேசில், நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிரேசில் அணிக்கு டானிலோ (23ஆவது நிமிடம்), டாமியோ (29ஆவது), சாண்ட்ரோ (52ஆவது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இப்பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் எகிப்து அணி 3-1 என்ற கோல் கணக்கில் பெலாரசை தோற்கடித்தது. லீக் சுற்றின் முடிவில் சி பிரிவில் முதலிரண்டு இடங்களை பிடித்த பிரேசில் (9 புள்ளி), எகிப்து (4) காலிறுதிக்கு முன்னேறின.டி பிரிவில் நடந்த ஜப்பான் - ஹோண்டுராஸ், ஸ்பெயின் - மொராக்கோ அணிகள் மோதிய லீக் போட்டி கோல் எதுவுமின்றி சமநிலை ஆனது. இதன்மூலம் முதலிரண்டு இடங்களை பிடித்த ஜப்பான் (7 புள்ளி), ஹோண்டுராஸ் (5) அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன. பி பிரிவில் நடந்த லீக் போட்டியில் மெக்சிகோ அணி 1-0 என சுவிஸ்சர்லாந்தை வீழ்த்தியது. தென் கொரியா - காபான் அணிகளுக்கு இடையிலான போட்டி கோல் எதுவுமின்றி சமநிலை ஆனது. இப்பிரிவில் முதலிரண்டு இடங்களை பிடித்த மெக்சிகோ (7), தென் கொரியா (5) அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. காலிறுதியில் இங்கிலாந்து -தென் கொரியா, பிரேசில் - ஹோண்டுராஸ், மெக்சிகோ-செனிகல், ஜப்பான் - எகிப்து அணிகள் மோதுகின்றன.

### பிரேசில் அதிர்ச்சித் தோல்வி

மகளிர் கரப்பந்துப் போட்டி யின் பி பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பிரேசில் அணி தென் கொரியாவிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், அபாரமாக விளையாடிய தென் கொரியா 25,23, 25,21, 25,21 என்ற நேர் செட் களில் பலம் வாய்ந்த பிரேசில் அணியை வீழ்த்தி அசத்தியது. ஏ பிரிவில்ஜப்பான் 25-20, 25 - 19, 25 - 23 என்ற நேர் செட்களில் டொமினிகன் குடியரசைவென்றது.

இத்தாலி அணி இங்கி லாந்தை வென்று ஏ பிரிவில் 2ஆவது இடம் பிடித்தது.

## அந்தரத்தில் அவதிப்பட்ட லண்டன் மேயர்

(லண்டன்)



லண்டன் ஒலிம்பிக்போட்டிகளை விக்டோரியா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள இராட்சத திரையில் இரசிகர்கள் கண்டு களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தரத்தில் கம்பியில் தொங்கியபடி பயணித்து மகிழும் 'ஸிப் வயர்' வசதியும் அங்கு உள்ளது. இங்கிலாந்து அணி பங்கேற்கும் படகு போட்டியை பார்ப்பதற்காக வந்த லண்டன் மேயர் போரிஸ் ஜான்சன், இந்த ஸிப் வயரில் தொங்கியபடி சென்றுஇரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சிகொடுக்க நினைத்தார்.

கொடியசைத்தபடி உற்சாகமாக வந்தவர், திடீரென கம்பி பயணம் தடைபட்டு அந்தரத்தில் அப்படியே தொங்க நேரிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. யாராவது கயிறு போட்டு கீழே இறக்குங்கப்பா என்று கத்திக் கொண்டிருந்தார். அப்படியும் பல நிமிடங்கள் அவரை தொங்கலில் விட்டுவிட்டார்கள். பின்னர் 'விரைந்து' வந்த அதிகாரிகள் அவரை கீழே இறக்கினர். பொது நிகழ்ச்சிகளில் போரிஸ் இப்படி காமெடி பீஸ் ஆவது இது முதல் முறை அல்ல. படகு போட்டியை தொடங்கிவைக்க போனவர், ஆற்றில் விழுந்து செய்த அலப்பரை தனி கதை. அபாரமான பேச்சாற்றல், நகைச்சுவை உணர்வு மிக்க போரிஸ், இங்கிலாந்தின் அடுத்த பிரதமராக அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

## பீற்றர்சன் சதம் மீண்டது தென்னாபிரிக்கா



(லீட்ஸ்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஏ.என். பீற்றர்சனின் சதத்துடன் தென்னாபிரிக்கா அணி நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இங்கிலாந்தில் லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்க அணி இங்கிலாந்து அணி வீரர்களின் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறியது. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஏ.என். பீற்றர்சனின் பொறுப்பான சதத் துணையுடன் கௌரவமான நிலையை எட்டியுள்ளது. இறுதியில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஏ.என். பீற்றர்சன் ஆட்டமிழக்காது 124 ஓட்டங்களையும் மற்றும் ஸ்மித் 52, ஏ.பி.டி.வில்லியர்ஸ் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன், பின், பிரெஸ்ணன், ட்ரொட் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.



## சுருண்டது நியூசிலாந்து அணி

(கிஸ்டன்)

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணி 260 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்துள்ளது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி மேற்கிந்தியத்தீவின் கிறிஸ்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குப்ரில் 71, அணித் தலைவர் டெய்லர் 60, வில்லியம்ஸன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரோச் நான்கு, பெஸ்ட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கிறிஸ் கெய்ல் ஒரு ஓட்டத்துடனும், பவல் 10 ஓட்டத்துடனும் களத்திலிருந்தனர்.




சர்வதேசக் கிரிக்கெட் சபையின் மக்கள் தெரிவு விருதுக்கான வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள 5 வீரர்களுள் இலங்கையின் குமார் சங்கக்காரவும் உள்ளடங்குகிறார்.

3ஆவது தடவையாக இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இவ்விருது வழங்கல் நிகழ்வில் இலங்கையின் குமார் சங்கக்கார, இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், தென்னாபிரிக்காவின் வேர்ணன் பிலாந்தர், ஜக்ஸ் கலிஸ் ஆகியோரோடு இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் பிரேரிக்கப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விருதுகளின் போது ஆரம்ப வருடத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் வென்று கொண்டதோடு, கடந்த வருடம் இலங்கையின் குமார் சங்கக்காரவும் வென்றிருந்தனர்.

கிரிக்கெட் இரசிகர்கள் தங்களுக்கு விருப்பமாக கிரிக்கெட் நட்சத்திரத்தைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக சர்வதேசக் கிரிக்கெட் சபை ஏற்படுத்தியுள்ள இந்த வசதியைக் கிரிக்கெட் இரசிகர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக சர்வதேசக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 31ஆம் திகதிவரை வாக்களிக்கும் வாய்ப்பு இரசிகர்களுக்குவழங்கப்படும் எனத்தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட்சபை செப்டெம்பர் 15ஆம் திகதிகொழும்பில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விருது வழங்கல் விழாவில் இவர்களில் இரசிகர்களால் தெரிவுசெய்யப்படுபவருக்கு விருது வழங்கப்படும் என சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. வாக்களிக்க விரும்பும் இரசிகர்கள் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பேஸ்புக் பக்கத்திற்குச் செல்வதன் மூலம் தங்கள் வாக்குகளை அளிக்கலாம். (www.facebook.com/cricketicc)

விளையாட்டு செய்திகள்

# அளவெட்டி மத்தி, மானிப்பாய் ஒக்ஸ்பேர்ட் இன்று பலப்பரீட்சை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இளைஞர் கழகம் நடாத்திய அணிக்கு 11 பேர் கொண்ட ருவென்ரி-20 மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் இன்றைய இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து மானிப்பாய் ஒக்ஸ்பேர்ட் அணி மோதவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் வட்டுக்கோட்டை இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்டது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள மென்பந்து கிரிக்கெட்டின் முன்னணி அணிகள் பல பங்குகொண்டன. இதில் அரையிறுதி ஆட்டமொன்றில் அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அணி மோதியது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அளவெட்டி மத்தி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதற்கமைய துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 113ஓட்டத்தைப் பெற்றது. இதில் ராஜ் 27, கணேஸ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வைகுந்தன், கபிலன், தயாளன், பிரணவன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 114 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அளவெட்டி மத்தி அணி 17 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப்பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இறுதிப்போட்டியில்விளையாடும் வாய்ப்பை அளவெட்டி மத்தி பெற்றது. துடுப்பாட்டத்தில் தயாளன் 41, கபிலன் 13 ஓட்டங்களைப்பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர்.

இதேவேளை மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் ஒகஸ்பேர்ட் வெற்றிபெற்று ஏற்கனவே, இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று மதியம் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை இளைஞர் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்இறுதிப்போட்டியில் அளவெட்டி மத்தி அணியை எதிர்த்து மானிப்பாய் ஒக்ஸ்பேர்ட் அணி மோதவுள்ளது. இரு அணிகளும் பல இறுதிப் போட்டிகளில் விளையாடிய அனுபங்களைக்கொண்டிருப்பதால் இப்போட்டியின் பரபரப்புக்கும் விறுவிறுப்புக்கும் பஞ்சமிருக்காது என போட்டி ஏற்பாட்டாளர்களால் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)



அளவெட்டி மத்தி.



மானிப்பாய் ஒக்ஸ்பேர்ட்

## கைதடி மினிக்ஸி, சாவகச்சேரி வின்டோஸ் இறுதியில் இன்று மோதல்

(கைதடி)

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் நடைபெறவுள்ளது.

அணிக்கு 11 பேர் 12 ஓவர்களைக்கொண்ட இம் மென்பந்துக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி வின்டோஸ் அணியை எதிர்த்து கைதடி மினிக்ஸி அணி மோதவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மென்பந்து கிரிக்கெட்டின் வலுவான அணிகளாகத் திகழும் மேற்படி இரு அணிகளும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளதால் போட்டி குறித்த பரபரப்பு இரசிகர்களிடையே பெரும் ஆவலை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, போட்டியைக் காண ஏராளமான இரசிகர்கள் மைதானத்தை வந்தடைவார்கள் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

## அரச சேவையாளர்களுக்கான மாகாண மென்பந்து இன்று

(வவுனியா)

வவுனியா மாவட்ட இலங்கை அரசசேவை விளையாட்டுச் சங்கம் வடமாகாண மட்டத்தில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை இன்று முதல் நாளை வரை வவுனியா நகர சபை மைதானத்தில் நடத்தவுள்ளது.

அரச பணியாளர்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டிகளில் வடமாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள் பலவும் பங்குபற்றவுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து மாவட்ட விளையாட்டுத் திணைக்கள அதிகாரிகளின் வழி நடத்தலில் மாவட்ட செயலக, பிரதேச செயலக மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களை உள்ளடக்கிய குழு ஒன்று இப்போட்டித் தொடரில் பங்குபற்றுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (120)

## மரதன் ஓட்டப் போட்டி

(தும்பளை)

பருத்தித்துறை நகராட்சி மன்றம் நடத்தும் மரதன் ஓட்டப் போட்டி சபையின் எல்லைக்குட்பட்ட கழகங்களை ஒன்றிணைத்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் போட்டியினை நடத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் மேலும் பத்து வெற்றியாளர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்படும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பயிற்சி முகாம் நிறைவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு யுவர் பிரண்ட் பவுண்டேசன் ஆதரவுடன் கிரிக்கெட் பயிற்சிமுகாம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்று வரை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இவ் பயிற்சிமுகாமில் இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னணிப் பயிற்சியாளர்கள் பங்குபற்றி வடமாகாணக்கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கிவருகின்றனர். மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்தப்பயிற்சிமுகாமிற்கு 100இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்திவருகின்றனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 13 வயதிலிருந்து 15 வயதிற்கு உட்பட்ட பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் இந்தப் பயிற்சிமுகாமில் கலந்து கொண்டுள்ளனர். (93)


## காலிறுதியில் நீர்வேலி ஐக்கியம்

வடமாகாண ரீதியில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரப்பந்தாட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இத்தொடரின் முதல் சுற்றுப்போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய அணி மோதியது. நீர்வேலி ஐக்கிய அணி முதல் சுற்றை 25-23 என்ற கணக்கில் கைப்பற்றியது.

2ஆவது சுற்றையும் நீர்வேலி ஐக்கிய அணி 25-22 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

மற்றுமொரு பிரிவாக நடாத்தப்படும் தென்மராட்சிப் பிரதேசங்களிற்கு உட்பட்ட கழகங்களிற்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டியில் மட்டுவில் வளர்மதி வி.கவும் கைதடி நவசக்தி வி.கவும் மோதின முதல் சுற்றை 25-21 என்ற கணக்கில் மட்டுவில் வளர்மதி வி.க கைப்பற்றியது. 2வது சுற்றை கைதடி நவசக்தி வி.க 25-19 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3ஆவது சுற்றில் மட்டுவில் வளர்மதி வி.க 25-20 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது. (93)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடப்பாண்டு நடைபெற்ற மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான குழுப் போட்டியில் முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியினரையும், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியவலன், ஆசிரியர், பயிற்றுநர் ஆகியோரையும் காணலாம்.

## கிளி. ம.வி. அபார வெற்றி

(கிளிநொச்சி)

மன்னார் தாழ்வுப்பாடு புனித வளனார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி அபாரமான வெற்றிபெற்றது. இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆட்டமொன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் தாழ்வுப்பாடு வளனார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 25 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீவன் 27, பஜீவனன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புவிதரன் ஏழு ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சுமித் ஐந்து ஓவர்கள் பந்து வீசி ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், ஜனோயன் 12 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 139 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மன்னார் புனித வளனார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணி 17.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று 66 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் குறுான் மட்டுமே 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றஜீவன், விதுர்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கடந்த வருடம் முதலே முதன் முறையாக அகில இலங்கை ரீதியில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்துள்ள கிளிநொச்சி மகாவித்தியாலய அணி இவ்வருடம் விளையாடிய நான்கு முதல் சுற்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42, எஸ்.பி.)



# ரிஷாத் பதியுதீன் தண்டிக்கப்பட்டால் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமா?

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.



கடந்த 18ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற முஸ்லிம் மீனவர்களின் ஆர்ப்பாட்டமும் அதனைத் தொடர்ந்து மன்னார் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற குழப்ப நிலையும் இப்போது பாரிய பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. அந்நிகழ்வுகளை அடுத்து அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பெரும் சட்ட சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார். புதிய நிலைமையானது சம்பந்தப்பட்ட மீனவர்களின் பிரச்சினையை மூடி மறைத்துவிடுமா அல்லது திசை திருப்பிவிடுமா என்றும் எண்ணத் தோன்றுகிறது.

அமைச்சர் பதியுதீன் - மன்னார் நீதிவானை தொலைபேசி மூலம் மிரட்டியதாகக் கூறி இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர். சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலர் அமைச்சருக்கு எதிராக வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளனர்.

இதற்கிடையில் அம்பாறை மாவட்டத்தில் சட்டத்தரணிகள் அமைச்சருக்கு ஆதரவாக குரல் எழுப்பியுள்ளனர். எடுத்த எடுப்பில் பார்க்கும் போது அவர்கள் இன ரீதியாக பிரச்சினையை அணுகி அமைச்சருக்கு சாதகமாக கருத்து வெளியிட்டு இருப்பதாக தோற்றமளித்தாலும் அவர்கள் மிக முக்கியமானதோர் கருத்தையும் வெளியிட்டு இருந்தனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளனர் என்றும் அமைச்சருடைய கருத்தை கேட்க முற்படவில்லை என்றும் அம்பாறை சட்டத்தரணிகள் கூறியிருந்தனர்.

இவை அனைத்தும் ஏற்கனவே ஊடகங்களில் வெளியானவையாகும். அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஏற்கனவே நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளதால் இவற்றுக்கு அப்பால் சென்று அக்குற்றச்சாட்டுகளைப் பற்றி அலசுவது பத்திரிகையாளர்களுக்கு பொருத்தமாகாது.

அந்த விடயங்கள் ஆராயப்பட்டு அமைச்சர் சரியா அல்லது சட்டத்தரணிகளின் குற்றச்சாட்டுகள் சரியா என்பதை நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டிய விடயமாகும். உண்மையிலேயே அமைச்சர் - நீதிபதியை மிரட்டியிருந்தால் அது பாரதூரமான குற்றம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஆனால் அவர் தண்டிக்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட மீனவர்களின் பிரச்சினை தீரப் போவதில்லை. அவர்கள் கடந்த 18ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்திய இடம் சரியா?, பிழையா? என்பதும் அன்று இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி எவர் கூறுவது உண்மை என்பதும் சர்ச்சைக்குரியதாக இருந்தாலும் அன்று சிலர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள கட்டடங்களில் சிலவற்றை தாக்கியிருப்பதை எவரும் மறுக்கவில்லை.

அதேபோல் சம்பந்தப்பட்ட மீனவர்கள் உட்பட பலர் 1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் மன்னாரில் அவர்களின் சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டதும் உண்மையே. அவர்கள் தாம் முன்னர் அனுபவித்த உரிமைகளையே கேட்கின்றார்கள். ஜூலை 19ஆம் திகதி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள செய்தியொன்றின்படி மன்னார் மாஜிஸ்திரேட் நீதிவானும் சில தினங்களுக்கு முன்னர் இந்த முஸ்லிம் மீனவர்களுக்கு சாதகமாகவே பணிப்புரை வழங்கியுள்ளார்.

மன்னாரில் இருந்து மட்டுமல்ல, வட மாகாணத்தில் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் எவ்வித நியாயமும் இல்லாமல் 1990ஆம் ஆண்டு புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டதையோ அல்லது வெளியேற்றப்பட்ட முறையையோ தமிழ் சமூகமும் ஏற்றுக் கொள்ளவில்லை. புலிகளும் கூட பின்னர் இந்த வெளியேற்றத்தைப் பற்றி கவலை தெரிவித்தனர்.


மன்னாரில் இப்போது எழுந்துள்ள பிரச்சினையானது பாரியதோர் பிரச்சினையின் சிறு வெளிப்பாடு மட்டுமே. எனவே இன்று மன்னார் பிரச்சினையை சமாளித்துவிட்டாலும் அல்லது வேறு பிரச்சினைகள் அதனை மூடி மறைத்துக் கொண்டாலும் அதுபோன்ற பிரச்சினைகள் அடிக்கடி ஆங்காங்கே தலை காட்டும் சாத்தியக்கூறுகள் அதிகம். அந்த அடிப்படைப் பிரச்சினைக்குத் தான் தீர்வு காணப்பட வேண்டும்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற இடம்பெயர்வுகளினால் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பது முஸ்லிம்கள் மட்டுமல்ல. வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்காக பாதுகப்புப் படையினரால் சுவீகரிக்கப்பட்ட தமிழர்களுக்கு சொந்தமான காணிகளிலும் பல இன்னமும் அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

ஆனால் அவர்கள் திரும்பி வரும் விடயத்தில் அவர்களுக்கும் படையினருக்கும் இடையே தான் பிரச்சினைகள் ஏற்பட்டால் ஏற்படுகின்றன. கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இடம்பெயர்ந்த அல்லது விரட்டப்பட்ட முஸ்லிம்கள் திரும்பி வரும்போது சிலவேளைகளில் தமிழ் மக்களுடன் பிரச்சினைகள் ஏற்படுவதே.

இடம்பெயர்ந்த மக்கள் தமிழர்களாக இருந்தாலும் முஸ்லிம்களாக இருந்தாலும் தத்தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான அவர்களது உரிமையை எவராலும் மறுக்க முடியாது. அதேவேளை மீள்குடியேற்றத்தின் பின்னர் அவர்கள் அப்பகுதிகளில் ஏற்கனவே வாழும் மக்களுடனேயே வாழ்நாள் முழுதும் வாழ வேண்டும். அவர்களது சந்ததியினரும் அனேகமாக அங்கேயே வாழ்வர். எனவே மீள்குடியேற்றத்தின் போது இன சௌஜனயம் பாதுகாக்கப்படுவதும் முக்கியமாகும்.

## தட்டையாக விழும் தண்ணீர்



மழைத் தண்ணீர் முத்துப் போன்ற அளவில் கீழே விழுவதில்லை. பேக்கரி பணிஸ் அளவில் அதாவது தட்டை வடிவில்தான் கீழே விழுகிறது. இந்த வடிவில் விழக் காரணம் பூமியில் உள்ள காற்றழுத்தமே. கீழே விழும் நீரை பூமியில் உள்ள காற்று மேல் நோக்கி அழுத்துவதால், தண்ணீர் கீழே விழும்போது தட்டை வடிவில் ஆகிவிடுகிறது. இதை அல்ட்ரா ஸ்லோமோஷன் கமெராவில் படம் பிடித்துக் கண்டுபிடித்துள்ளனர்.

## தொட்டால் தொடரும்

- என். சொக்கன் -

நிஜ சிலேட்டுகள் அபூர்வமாகிவிட்ட இதே நேரத்தில், மின் சிலேட்டுகளுக்கு மவுசு அதிகரிக்கத் தொடங்கியிருப்பது ஒரு விசித்திரம். டாப்லட் கம்ப்யூட்டர் என்று அழைக்கப்படும் மின் சிலேட்டுகள்தான் இன்றைய லேட்டஸ்ட் எலக்ட்ரோனிக்ஸ் மோகம். மாணவர்கள் தொடங்கி அதிகாரிகள் வரை எல்லோரும் இதைத் தொடத் துடிக்கிறார்கள். ஆகவே, அப்பிள், சாம்சுங், மைக்ரோசொ:.ப்ட் போன்ற பெருந்தலைகளில் ஆரம்பித்துப் பெயரில்லாத துண்டு துக்கடா கம்பெனிகள்வரை எல்லோரும் ஆளுக்கொரு டாப்லட்டைத் தயாரித்துக்கொண்டு களத்தில் குதித்திருக்கிறார்கள்.



உண்மையில், டாப்லட் கம்ப்யூட்டர் என்பது கொஞ்சம் பெரிய ஸ்மார்ட்:. போன், அல்லது, கொஞ்சம் சிறிய லாப்டொப். உலகின் மிகப் பிரபலமான டாப்லட் கம்ப்யூட்டர், அப்பிள் நிறுவனத் தயாரிப்பான ஐபாட். இது சுமார் பத்து அங்குல குறுக்களவு கொண்ட தொடுதிரையுடன் கூடியது. இதைவிடச் சிறிய ஏழு அங்குல டாப்லட்களும் ஏராளமாகச் சந்தையில் கிடைக்கின்றன. இவை அனைத்தும் கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டவை.

இளைய தலைமுறையினர், குறிப்பாக மாணவர்களுக்கு டாப்லட்கள் மிகப் பெரிய வரப்பிரசாதமாக உள்ளன. அவர்களது பள்ளி அல்லது கல்லூரிப் பாடங்களையெல்லாம் மல்ட்டிமீடியா வசதியுடன் படிக்கவும் இணையத்தில் அதுகுறித்த தகவல்களைத் தேடிப் பிடிக்கவும், அந்தந்தத் துறை நிபுணர்களுடன் தொடர்பு கொண்டு சந்தேகங்களுக்கு விளக்கம் பெறவும் இது மிகவும் துணைபுரிகிறது.

டாப்லட்களின் இன்னொரு சௌகரியம், அவை எங்கே இருக்கின்றன என்பதைக் கண்டறியமுடியும். அதாவது, டாப்லட்டைக் கையில் வைத்துள்ள நாம் இப்போது எந்த நாட்டில், எந்த ஊரில், எந்த ஏரியாவில், எந்தக் குறுக்குச்சந்தில் உள்ளோம் என்பதுவரை மிகத் துல்லியமாகத் தெரிந்துகொள்ளலாம். ஆங்கிலத்தில் இதனை Location Aware என்று அழைக்கிறார்கள். இந்த விவரத்தை வைத்து நாம் பல புதுமையான பயன்பாடுகளைப் பெறலாம்.

உதாரணமாக, நீங்கள் ஒரு நண்பரைச் சந்திக்கச் செல்கிறீர்கள், ஆனால் அவருடைய வீடு எங்கே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியவில்லை. இந்த நேரத்தில் உங்கள் கையில் ஒரு டாப்லட் இருந்தால், அதில் இருக்கும் GPS Location வசதியைப் பயன்படுத்தி, நகர வரைபடத்தில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று பார்க்கலாம், உங்களுடைய நண்பரின் வீடு இருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ளலாம், இங்கிருந்து அங்கே செல்ல எவ்வளவு தூரம், என்ன வழி என்று துல்லியமாகப் பார்த்துவிடலாம். அதுமட்டுமில்லை, அந்த வழியில் நீங்கள் நடக்க நடக்க, உங்கள் டாப்லட் அதைச் சரிபார்க்கும். தவறான திசையில் நடந்தால் சுட்டிக்காட்டித் திருத்தும்.


பெங்களூரின் பிரபலமான ஓர் உணவகத்தில் மெனுப் பட்டியலுக்குப் பதிலாக டாப்லட்டை நீட்டுகிறார்கள். எல்லா உணவுப் பொருள்களும் படத்துடன் அழகாகக் கண் சிமிட்டுகின்றன. ஏதாவது ஒரு உணவுப் பொருளைத் தொட்டால், அதன் பெயர், இனிப்பா, காரமா, அதில் என்னென்ன பொருட்கள் கலந்துள்ளன, அதைச் சாப்பிட்டால் எத்தனை கலோரி நம் உடம்பில் சேரும், அதன் விலை என்ன, இதற்கு முன் அந்த ஐட்டத்தைச் சாப்பிட்டவர்கள் எழுதிய விமர்சனங்கள் என்று சகல விவரங்களும் தெரிகின்றன. வேண்டியதை க்ளிக் செய்தால் போதும். உள்ளே சமையலறையில் உள்ள கம்ப்யூட்டரில் நாம் என்ன உணவைக் கேட்கிறோம் என்கிற விவரங்கள் திரையிடப்படுகின்றன. அவர்கள் அதைத் தயாரிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

அநேகமாக எல்லாத் தொழில் நிறுவனங்களும் டாப்லட்களை எப்படித் தங்கள் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது என்கிற முனைப்பில் இருக்கின்றன. அடுத்த சில ஆண்டுகளில் டாப்லட்களை அடிப்படையாக வைத்துப் புதுமையான பல யோசனைகளை எதிர்பார்க்கலாம்.

ஒரே பிரச்சினை, இந்த டாப்லட்கள் அனைத்தும் விலை அதிகம். சுமார் எண்பதாயிரம் ரூபாய்க்கு மேலே முதலீடு செய்யத் தயாராக இருப்பவர்கள்தான் இவற்றை நெருங்கமுடியும்.



டாப்லட் கம்ப்யூட்டர்கள் பெரும்பாலும் இணையம் சார்ந்து இயங்குபவை. ஆனால் இணையத்துக்கான செலவு கணிசமாகக் குறைந்துவருகிறது. டாப்லட்களின் விலையும் இறங்கிக் கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கம், தரம், செயல்திறன் போன்றவை உயர்கின்றன. இதையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்க்கிறபோது, விரைவில் நம் நாட்டிலும் மின் சிலேட்டுகளின் ஆதிக்கம் அதிகமாகிவிடும் என்று நம்பலாம்.



## பொப்கோர்ன் சாப்பிடுங்கள்

பீட்சா, பர்கர் வரிசையில் பொப்கோர்னும் நொறுக்குத் தீனியாக சேர்க்கப்பட்டுவிட்டது. பொப்கோர்னில் உள்ள நார்ச்சத்து உடலுக்கு நல்லது என்று நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்க கெமிக்கல் அகடமி விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பில் இன்னும் ஒரு விஷயம் தெரியவந்துள்ளது. பொப்கோர்னில் உள்ள நார்ச்சத்தைவிட விஷ முறிவு இரசாயனம் மிகவும் நல்லது. இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் முதல் புற்றுநோய் வரை வருவதைத் தடுக்க இந்த இரசாயனம் உதவுகிறதாம். நிலக்கடலை, காய்கறிகள், பழங்கள். சொக்லெட், கோப்பியில் கூட விஷ முறிவு இரசாயனம் இருக்கிறதாம்.

## அப்படியா!

✷ உடலில் வெட்டுக்காயம் ஏற்படின் இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பு சிறிதளவு வசம்பு அரைத்து, அந்தக் காயத்தில் தடவினால் காயம் விரைவில் குணமாகும்.

✷ வளி மண்டலத்தில் நம்மைத் தூங்க வைக்கும் செனாள் என்ற வாயு உள்ளது. இதற்கு மயக்க மருந்துகளுக்குரிய தீய இயல்புகள் ஏதும் கிடையாது.



✷ நீருக்குள் 120 அடி ஆழ தூரம் சென்றுவிட்டால், நமது உடலில் ஓடும் ரத்தம் பச்சை வண்ணமாகத் தெரியும். கதிரவனின் சிவப்புக் கதிர்கள் சில அடி தூரம் வரை ஊடுருவிச் செல்வதுதான் இதற்குக் காரணம்.

✷ விண்வெளியில் ஒரு மனிதன் பறக்க 15 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது என்று கணக்கிட்டுள்ளனர்.

✷ 40 வயதைத் தாண்டியவர்களுக்கு 7 மணி நேரம்தான் தூக்கம் தேவைப்படுகிறது. கோப்பி, கோலா போன்ற கொ.்.பின் நிறைந்த பானங்களும் உறக்கத்தின் எதிரிகள் ஆகும்.

✷ உடலில் உள்ள பல நோய்களையும் தண்ணீர் அருந்துவதன் மூலம் குணப்படுத்தமுடியும் என்று ஜப்பான் மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

✷ உலகத்தில் அதிக குற்றங்கள் நடைபெறும் நாடு பிரிட்டன்தான். அதற்கு அடுத்த இடத்தில் பிரேசில், தென்அமெரிக்க நாடுகள் உள்ளன.


நீ ஆணா, பெண்ணா? இந்தக் கேள்விக்கு பதில் சொல்லியே தீரவேண்டும் என்ற நெருக்கடியை நம்மில் பெரும்பாலோர் சந்திப்பதே இல்லை. ஆனால் இந்த நெருக்கடியை சந்திக்கவேண்டி வருவோரின் வாழ்க்கை நரகமாக்கப்படுகிறது என்பதில் துளியும் சந்தேகம் இல்லை. அதன் அடையாளமாகத்தான் இன்று விளையாட்டு வீரர்கள் பிங்கியும் சாந்தியும் இருக்கிறார்கள்.

இந்திய தடகள வீராங்கனைகளான இருவரின் வாழ்க்கையும் அவர்கள் பெண்கள்தானா என்ற கேள்வியால் நரகமாக்கப்பட்டுவிட்டது. இவர்களின் பிரச்சினையைப்

# பதில்கள் தேடும் கேள்விகள்...

— ஞாநி





புரிந்துகொள்ளுவதற்கு முதலில் இயற்கை என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கேட்க அதிர்ச்சியாக இருந்தாலும், ஆண், பெண் என்ற வரையறை இயற்கை ஏற்படுத்தியதல்ல. நாம் ஏற்படுத்தியதுதான். இயற்கை நாம் ஆண் என்று சொல்லும் வடிவத்துக்கும் பெண் என்று சொல்லும் வடிவத்துக்கும் இடையில் எண்ணற்ற வடிவங்களை உருவாக்கிக் கொண்டேதான் இருக்கிறது. அறிவியல் அவற்றை அறிந்திருக்கிறது. ஆனால் சமூக ரீதியில் அவற்றுக்கெல்லாம் நாம் உரிய பெயர் சூட்டி வகைப்படுத்தி அங்கீகரிக்கத் தவறியிருக்கிறோம் என்பதுதான் அசல் பிரச்சினை.

உடல்ரீதியாக அறிவியல் முற்றிலும் இது ஆண் உடல் என்றும் இது பெண் உடல் என்றும் வரையறுக்கும் உடல்கள் அமையப் பெறாமல் இரு தன்மைகளும் வெவ்வேறு விகிதங்களில் அமைந்த உடல்களைப் பெற்றவர்களை நம் சமூகம் எப்படிப் பார்க்கிறது? அவர்களுக்கு உடல் எப்படி இருந்தபோதிலும் மன ரீதியாக தன்னை ஆண் என்று உணர்ந்தால் ஆணாகவும், பெண் என்று உணர்ந்தால் பெண் ஆகவும் அறிவித்துக் கொள்ளும் உரிமையை நம் சமூகம் வழங்குகிறதா? அல்லது இரண்டுமில்லாத மூன்றாம் பாலினம் என்று தன்னை அறிவித்துக் கொண்டால், அதற்குரிய சட்ட அங்கீகாரமும் சமூக வசதிகளும் இன்னமும் இல்லையே?

இந்தத் தீர்க்கப்படாத சமூக சிக்கல்களை அவ்வப்போது நமக்கு நினைவுபடுத்தும் விதத்தில்தான் விளையாட்டுத் துறையில் ஏற்படும் சர்ச்சைகள் அமைகின்றன.

அடையாள சர்ச்சையில் சிக்கி சீரழிக்கப்பட்ட ஒருவர் தமிழ்நாட்டின் சாந்தி சவுந்தரராஜன். இப்போது 31 வயதாகும் சாந்தி 11 சர்வதேச மெடல்களும் 50 உள்ளூர் மெடல்களும் வென்றவர். 2006இல் கத்தாரில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார். சில சக வீரர்கள் ஆட்சேபித்ததையடுத்து அவருக்கு பாலியல் சோதனை செய்யப்பட்டது. அவரை பெண் ஆகக் கருதமுடியாது என்று முடிவு செய்து, கொடுத்த மெடல் பறிக்கப்பட்டது.

உண்மையில் சாந்தியின் பிரச்சினை வேறு. பெண்ணாகவே பிறந்தபோதும் ஆண்ட்ரோஜென் சென்சிட்டிவிட்டி சிண்ட்ரோம் என்ற குறைபாட்டுடன் அவர் பிறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் குறைபாட்டினால், பெண் உடல் இருந்தபோதும் பெண் தன்மைக்குரிய சுரப்புகள் பாதிக்கப்படுகின்றன.

சாந்திக்காக இந்திய அரசோ தமிழக அரசோ ஆசிய விளையாட்டு நிர்வாகத்துடன் சண்டையிட்டதாகத் தெரியவில்லை. இப்போது சாந்தி வறுமையினால் தினக்கூலி வேலைக்குச் செல்வதாக செய்திகள் வெளியானபின், அரசு தரப்பில் இருந்து ஆதரவுக் குரல்கள் வருகின்றன.

மத்திய விளையாட்டு அமைச்சர், தென் ஆபிரிக்க வீராங்கனை காஸ்டர் செமன்யாவுக்காக அந்த நாட்டு அரசு போராடியதைப் போல சாந்திக்காக இந்திய அரசு போராடுமென்று அறிவித்திருக்கிறார்.

இந்தியாவை விடப் பின்தங்கிய நாடாகக் கருதப்படும் தென் ஆபிரிக்கா காஸ்டர் செம்னயாவுக்காகப் போராடியதில் நூற்றில் ஒரு பங்கு கூட இந்தியா இதுவரை சாந்திக்காக செய்யவில்லை. 2006இல் மெடல் பறிக்கப்பட்ட உடன்




போராடாமல் விட்டுவிட்டு 2012இல் என்ன, எப்படி போராடுவார்கள் என்று தெரியவில்லை.

காஸ்டர் செமன்யாவின் விஷயத்தில் மிக முக்கியமான அம்சம் அவர் ஆணா பெண்ணா என்று நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவைக் கூட பகிரங்கப்படுத்த அவர் தடை வாங்கியிருப்பதுதான்.

செமன்யா 2008இல் உலக ஜூனியர் போட்டியிலும் கொமன்வெல்த் போட்டியிலும் தங்கம் வென்றவர். செமன்யா 2009இல் 800 மீற்றர் ஓட்டத்திலும் 1500 மீற்றர் ஓட்டத்திலும் உலக சாதனைகளை ஏற்படுத்தியதும், அவரது பாலியல் அடையாளத்தை சோதிக்க சர்வதேச தடகளக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்தது.

உடனே இதற்கு பெரும் எதிர்ப்பு பல்வேறு விளையாட்டு வீரர்களிடமிருந்து மட்டுமல்ல, தென் ஆபிரிக்க அரசிடமிருந்தே வந்தது. செமன்யாவுக்கு சரியான ஆலோசனை சொல்ல தவறியதற்காக அவரது கோச் இராஜினாமா செய்தார். தென் ஆபிரிக்க அரசின் அறிவுரைப்படி செமன்யா, மிகப் பெரிய சட்ட நிறுவனத்தை தன் வக்கீலாக நியமித்தார். சோதனை



முடிவுகளை வெளியிட கோர்ட்டில் தடை வாங்கப்பட்டது. தனக்கு தந்த மெடலையும் பணத்தையும் செமன்யா வைத்துக் கொள்ளலாம் என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்தது. ஒரு பெண் எப்போது பெண் தன்மையற்றவராகக் கருதப்படுவார் என்பது பற்றிய சர்வதேச தடகளக் கூட்டமைப்பின் விதிகள் தெளிவாக இல்லை என்று தென் ஆபிரிக்க அரசு கூறிவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வருட லண்டன் ஒலிம்பிக்கில் தென் ஆபிரிக்க அணியின் கொடியை ஏந்தி மைதானத்தில் செமன்யா வலம் வர ஒழுங்கு செய்தது அரசு.

செமன்யா விஷயத்தில் தென் ஆபிரிக்க அரசு நடந்துகொண்டதைப் போல இங்கே சாந்திக்கு நடக்காமல் போனதற்குக் காரணம்.

இங்கே இருக்கும் அரசுகளுக்கு, விளையாட்டுத் துறையிலும் கொள்கைகள் சீராக இல்லை. பாலியல் அடையாளங்கள் பற்றிய அரசுக் கொள்கை என்பது ஒன்று இல்லவே இல்லை.

மீடியா வெளிச்சம் போட்டுக் காட்டியதும் சாந்திக்காகக் குரல் கொடுத்து ஓடிவரும் தொழிலதிபர்களும் அரசியல் வாதிகளும் இதையும் இன்னொரு தானதர்மமாகக் கருதாமல், இப்போதேனும் தெளிவான பாலியல் அடையாளக் கொள்கையை நம் அரசுகள் வகுக்க வற்புறுத்த வேண்டும்.

அவை உருவாகும்வரை சாந்திகளும் பிங்கிகளும் நம் சமூகத்தில் சர்ச்சைகளாகவும் கேலிப் பொருட்களாகவும் மட்டுமே இருப்பார்கள் என்பதே கசப்பான உண்மை.




## பூ முடிப்பாள் இந்த பூங்குழலி

இந்தப் பாட்டில் வரும் கீழ்க்கண்ட வரிகளுடனேயே என் பிரச்சினை. "நிகழும் பார்த்திப ஆண்டின் ஆவணித் திங்கள் 20ஆம் நாள்" எனத் தொடங்கும் அவ்வரிகளை கல்யாணங்களில் பாடும் மெல்லிசைக் குழுவினர் சம்பந்தப்பட்ட கல்யாணம் நடக்கும் சரியான தமிழாண்டு, மாதம் ஆகியவற்றுடன் பெண்ணின் தந்தையின் பெயரையும் நுழைத்துப் பாடுவார்கள்.

இருக்கட்டுமே இதில் உன் பிரச்சினை என்ன என கேட்கிறீர்களா?

இப்பாடல், வரும் நெஞ்சிருக்கும் வரை என்னும் திரைப்படம் அறுபதுகளில் வந்தது. சென்னை மெரீனா பீச்சருகில் இப்போதும் காணக்கிடைக்கும் உழைப்பாளிகள் சிலை அப்படத்தில் காட்டப்படும். அச்சிலையும் 1959இல்தான் வந்தது. ஆனால் பார்த்திப ஆண்டு? 1945 ஏப்ரல் முதல் 1946 ஏப்ரல் வரை (நான் அந்த ஆண்டில்தான் பிறந்தேன்). ஆக, இதைத்தான் பொருட்குற்றம் என்பார்கள். ஆக, இப்பாட்டில் வரும் நிகழும் பார்த்திப ஆண்டு ஆவணித் திங்கள் 20ஆம் நாள், என்பது சுமாராக செப்டம்பர் மாதம் 5, 1945 ஆக இருக்கும். அதாவது அன்று புதன்கிழமை.

ஆனால், சமீபத்தில் அறுபதுகளின் தொடக்கத்தில் வந்த "பார் மகளே பார்" படத்தில் 18-கரட் தங்கம் பற்றிய பிரஸ்தாபம் கதையின் காலகட்டத்திற்கு ஏற்ப வந்ததை நோக்கினால் காட்சிகளில் லொஜிக்கிற்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கலாம்.

ஆனால் சில காட்சிப் பிழைகள் காலப்போக்கில் அடித்துச் செல்லப்பட்டு விடுவதும் நடக்கும். உதாரணத்துக்கு பார்த்தால் பசி தீரும் என்னும் படம். அதுவும் அறுபதுகளின் தொடக்கத்தில் வந்தது. கதை நடக்கும் காலமோ 1945-46. அப்படத்தில் அறுபதுகளில் உற்பத்தியான ஸ்டாண்டர்ட் ஹெரால்ட் கார் வரும். இப்போது அப்படத்தைப் பார்த்தால் யாருக்கு அந்த உண்மை தெரியப் போகிறது?

- ராகவன்.




# தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்!

சரியான விடை எழுதுபவர்களது விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவரவுள்ளது.

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.


## 1 பொது அறிவு துணுக்குகள்


1. உலகில் மின்தடையற்ற நாடு எது?
2. உலகிலே மிக அதிகமான கிளைகளைக் கொண்ட வங்கி எது?
3. பழங்களின் அரசன் யார்?
4. உயிரினங்கள் தோன்றியதாக கருதப்படும் வருடம் எது?
5. விமானத்தில் செல்பவர்களுக்கு வானவில் தெரியும் வடிவம் எது?


## புதிர்ப்போட்டி 2 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்


| | |
|---|---|
| இரவீந்திரன் சுஜந்தி<br>உடுவில் மகளிர் கல்லூரி | இரத்தினசிங்கம் பிரியதர்சினி<br>உடுவில் மகளிர் கல்லூரி |
| கையிலைநாதன் பவதாரணி<br>வட்டு. இந்துக் கல்லூரி | ஜோண்சன் ஏரன்டேவிஸ்<br>சென் ஜோன்ஸ் கல்லூரி |
| து.கோகுலன்<br>யாழ். இந்துக் கல்லூரி | ர.அபிதா<br>யாழ். இராமநாதன் கல்லூரி |


## 2 இடைவெளி நிரப்புக

1.



2.



3.



4.



5.



## 3

கிழேயுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் குறித்த கடை ஒன்றில் பயன்படுத்தப்படும் பின்வரும் இரகசிய குறியீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு முதல் இரு இலங்கங்களும் குறித்ததினம் ஒன்றில் யாதாயினும் ஒரு பொருளில் விற்கப்பட்ட அளவையும் அடுத்த இரு இலக்கங்களும் அப்பொருள் இனங் காணப்படும் எண்ணையும் இறுதி மூன்று இலக்கங்களும் அப்பொருளின் விற்பனையில் அத்தினத்தில் கிடைத்த வருமானத்தை காட்டுகின்றன. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 4 | 1 | 0 | 4 | 6 | 0 | 1 | 8 | 0 | 2 | 0 | 9 | 0 |
| 1 | 6 | 1 | 1 | 2 | 3 | 2 | 1 | 0 | 1 | 5 | 1 | 7 | 0 |
| 0 | 1 | 0 | 1 | 1 | 9 | 0 | 0 | 7 | 0 | 9 | 1 | 2 | 6 |
| 2 | 4 | 0 | 5 | 3 | 2 | 4 | 0 | 6 | 1 | 2 | 0 | 9 | 9 |
| 1 | 2 | 0 | 6 | 2 | 2 | 0 | 1 | 2 | 0 | 6 | 2 | 2 | 0 |
| 0 | 6 | 1 | 8 | 0 | 7 | 8 | 0 | 7 | 1 | 6 | 0 | 9 | 8 |
| 0 | 8 | 0 | 8 | 1 | 5 | 6 | 1 | 4 | 1 | 3 | 1 | 8 | 2 |

1) இக்கடையில் மலிவான பொருளைக் காட:டும் எண் யாது? (................................)

2) இத்தினத்தில் ஆகவும் உயர்ந்த வருமானம் கிடைத்துள்ள பொருளின் எண் யாது? (................................)

3) இத்தினத்தில் விற்கப்பட்ட விலைகூடிய பொருளின் விலை யாது? (................................)

4) இத்தினத்தில் இக்கடையில் விற்கப்பட்ட பொருள்களின் மொத்த எண்ணிக்கை யாது? (................................)

5) இப் பொருள்களை விற்பதன் மூலம் இக்கடை இத்தினத்தில் பெற்ற மொத்த வருமானம் யாது? (................................)

## முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியால யத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலை யத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டி யிலும் பேடலாம். K.K.S வீதியில் உள்ள தினமுரசு விளம்பர பணிமனையில் உளள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம்.

## புதிர்ப்போட்டி 2 இல் வெற்றியீட்டியோர் விபரம்



அ.மெஸ்ரூன் நிஷா
மானிப்பாய் மகளிர் கல்லூரி

த.மதுஷா
மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை



புதிர்ப்போட்டி 4 இற்கான விடைகளை எதிர்வரும் ஆகஸ்ட் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ........................................

பாடசாலையின் பெயர்

தரம் :- :-........................................

தொலைபேசி இல.:-........................................

முகவரி :-........................................

........................................

# பூவரசங்குளம் வைத்தியசாலையில் மருந்தைப் பெறுவதில் சிரமம்

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளம் மருத்துவமனையில் வெளிநோயாளர் பகுதியில் மருந்துகளை பெற்றுக்கொள்வதில் தாம் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு ஒரேயொரு சிங்கள வைத்தியரே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக வெளிநோயாளர் பகுதி தொடர்ச்சியாக திறந்திருப்பதில்லை எனவும் தெரிவித்ததுடன் கிளினிக் இடம்பெறும் நாட்களிலும் வைத்தியர் விடுமுறையில் செல்லும் நாட்களிலும் வெளிநோயாளர் பகுதி மூடப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மாலை நான்கு மணிக்கு வெளிநோயாளர் பகுதி மூடப்படுவதன் காரணமாக பூவரசங்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள நோயாளர்கள் இவ் வைத்தியசாலையிலேயே மருந்துகளை பெறவேண்டிய நிலை காணப்படுவதாகவும் இல்லையேல் 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா பொது வைத்தியசாலைக்கு அல்லது 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள செட்டிகுளம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தொவித்திருந்தனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு வைத்தியசாலைக்கு தேவையான வைத்தியர்களையும் ஊழியர்களையும் நியமித்து நோயாளர்களின் சிரமத்தை குறைத்துகொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

# வடமாகாணத்தின் கல்வி, கைத்தொழில்துறை; மலேசிய பிரதிநிதிகள் ஆராய்வு


(யாழ்ப்பாணம்)

மலேசியா-இலங்கை அமைப்பைச் சேர்ந்த தூதுக்குழுவொன்று வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷை கொழும்பிலுள்ள வடமாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடியது.

இச்சந்திப்பில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கல்வி, கைத்தொழில் மற்றும் குடிநீர் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இக்குழுவினர் வடமாகாணத்தில் காணப்படுகின்ற முதலீட்டு வளங்கள் குறித்தும் என்னென்ன முதலீட்டு வாய்ப்புகள் வடமாகாணத்தில் சாதகமாக காணப்படுகின்றன என்றும் கேட்டறிந்து கொண்டனர்.

வடமாகாணத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு மலேசியா-இலங்கை அமைப்பு எவ்வாறான பங்களிப்பை வழங்கலாம் என்றவகையில் வடமாகாண கல்வி நிலைமைகளை விரிவாக கேட்டறிந்து கொண்டனர். அத்துடன் உல்லாசப்பயணத்துறையின் வளர்ச்சி குறித்தும் கலந்துரையாடினர்.



இதன்போது வடமாகாண பிரதம செயலாளரினால் 2009 தொடக்கம் 2011 வரையான காலப் பகுதியில் நடைபெற்ற அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

வடமாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.இ.எஸ். ராஜேந்திராவும் இக்கலந்துரையாலில் கலந்து கொண்டார்.

## வணிக மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கு

(கிரு-சிகரம்)

வடமாகாணத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் 'இலங்கைப் பொருளாதாரமும் மத்திய வங்கியும்' என்ற தலைப்பில் வணிகக்கல்வி ஆசிரியர்களுக்கும், 'பேரினப் பொருளியல் ' என்ற தலைப்பில் உயர்தர மாணவர்களுக்குமான கருத்தரங்குகள் மத்திய வங்கியின் வட மாகாணக் கிளையினால் நடாத்தப்பட்டுள்ளது.

2012 உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சைக்கான ஒரு வழி காட்டியாக இது அமையும் என மத்திய வங்கியின் வடமாகாண கிளைக்கான பிரதி முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்குகள் யாழ்பபாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டு இறுதியாக வவுனியால் நடாத்தப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான பல செயற்பாடுகளை மத்திய வங்கி தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் மத்திய வங்கியின் வடமாகாண கிளைக்கான .பிரதி முகாமையாளர் குறிப்பிட்டார்.

# நடைபாதை வியாபாரத்திற்கு கால அவகாசம் விதிப்பு

(சிகரம்)

ஆகஸ்ட் 19ஆம் திகதிக்குப் பின்னர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நடை பாதையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு நடைபெற்ற வர்த்தகசங்கத்தினருடனான கலந்துரையாடலிலே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வைத்தியசாலை வீதியின் இரு மருங்கிலும் தற்போது நடை பாதை வியாபாரிகள் வியாபார நடடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக மாநகரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும், மக்களுடைய நலன் கருதியே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கட்டுரைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம் மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கான பரிசும், சான்றிதழும் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவினால் வழங்கப்படவுள்ளது. பரிசு பெற்ற மாணவ மாணவிகள் நேரடியாக வருகை தந்து தத்தமக்குரிய பரிசையும் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகர முதல்வரின் செயலாளர்அறிவித் துள்ளார். மாணவர்களின் விபரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு

கஸ்தூரி பரமானந்தம் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மேரி ஜெனேசியா (யாழ். பாசையூர் சென்அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்), வி.சிந்துஜன் (யாழ். பரியோவான் கல்லூரி).

மத்திய பிரிவு

ஜெ.செந்தூரி (யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயம்), யூ.சலோமி (யாழ். பாசையூர் சென்அன்ரனீஸ் றோ.க. மகளிர் வித்தியாலயம்), யோ. கவிநிலா (யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்).

மேற்பிரிவு

ஸ்ரீ.உமையாள் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ம.நிதுசாளினி (யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி), அ.நளினாசினி (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).




☒ காய்கறிகளின் நிறம் மாறாமல் இருக்க வேக வைக்கும் நீரில் சிறிது உப்பைப் போட்டால் நிறம் மாறாது.

☒ கீரை அவியும்போது சில துளிகள் எலுமிச்சைச் சாறைவிட்டு வேக வைத்தால் கீரை பச்சைப் பசேலென்று இருக்கும்.

☒ உடைக்காத முழுத்தேங்காயை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் நீண்ட நாள் கெடாமலும், தேங்காயை உடைக்கும் போது அந்தத் தண்ணீர் ஜில்லென்று தித்திப்பாகவும், சுவையாகவும் இருக்கும்.

☒ கத்தரிக்காய் குழம்புக்கு எண்ணெயில் வதக்கும்போது ஒரு தேக்கரண்டி கட்டித் தயிரை ஊற்றிவிட்டால் கத்தரிக்காய் கறுப்பாகாது.

☒ பாண் துண்டு காய்ந்துவிட்டால் சிறிதளவு சூடான பாலை அதில் தெளித்து, தோசைக் கல்லில் போட்டு வாட்டினால் பாண் புத்துணர்வு பெற்றுவிடும்.

☒ குழம்புகளுக்கு மசாலா அரைத்துப் போடும்பொழுது தேங்காய்ப் பூவுடன் கொஞ்சம் கசகசாவையும் சேர்த்து அரைத்துக் கொண்டால் ருசி சுவையாக இருக்கும் வயிற்றுப் புண்ணும் குணமாகும்.

☒ ரவை மாவை உப்புப்போட்டு குழைத்து வைத்து அதனுடன் உளுந்தை அரைத்துப் போட்டு தோசை சுட்டு எடுத்தால் ருசி ஆளைத் தூக்கும்.

☒ குளிர்சாதனப் பெட்டி வைத்திருப்பவர்கள் எலுமிச்சம்பழத்தின் தோலை அதற்குள் வைத்து மூடினால் உள்ளே துர்நாற்றம் வீசாது.

☒ இட்லிக்கோ தோசைக்கோ மா அரைத்தபின் அது பொங்கி வழியாமல் இருக்க அதில் ஒரு வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு வைத்தால் பொங்கி வழியாது.

☒ மரவள்ளிக் கிழங்கை அரிசி களைந்த நீரில் அவித்தால் விரைவில் வெந்துவிடும்.

☒ பொரியல் செய்யும்போது அந்தக் காய் அல்லது கிழங்கை உப்புத் தண்ணீரில் நனைத்து சிறிது நேரம் கழித்துப் பொரித்தால் சுவையாக இருக்கும்.

☒ தேங்காயைச் சரிபாதியாக உடைக்க தண்ணீரில் நனைத்த பின்னர் உடைக்க வேண்டும்.

☒ தோசைக்கு உளுந்து ஊற வைக்கும்போது கொஞ்சம் வெந்தயத்துடன் ஒரு தேக்கரண்டி கடலைப்பருப்பையும் சேர்த்து ஊற வைத்து அரைத்தால் தோசை சிவப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.

☒ உலை பொங்கி வரும் சமயத்தில் சில சொட்டுகள் நல்லெண்ணெயை ஊற்றி இறக்கினால் சோறு பொலபொலவென வரும்.

☒ மிளகாய்ப் பொடி தயாரிக்கும்போது அதில் நிலக்கடலையை சிறிது வறுத்துப்போட்டு சேர்த்தால் அதிக சுவையுடன் இருக்கும்.

☒ உருளைக்கிழங்கை சீவி நல்ல நீரில் கழுவிவிட்டு உப்பு நீரில் பதினைந்து நிமிடங்கள் ஊற வைக்க வேண்டும். பிறகு தண்ணீரை நன்றாகப் பிழிந்துவிட்டு எண்ணெயில் போட்டு வறுத்தால் சிப்ஸ் வெண்மையாக மொறுமொறுவென்று இருக்கும்.

☒ பக்கோடா மாவுடன் சிறிதளவு நெய்யும் உப்பு சேர்த்த தயிரும் கலந்து நன்றாகப் பிசைந்து கொண்டு பக்கோடா செய்தால் பக்கோடா மொறமொறப்பாகவும் ருசியாகவும் இருக்கும்.

☒ ரசத்திற்கு கருவேப்பிலை போடவில்லை என்றால் மணமாக இருக்காது. கருவேப்பிலை இல்லையென்றால் ரசம் தாளிக்கும் போது கடுகு வெடித்ததும் சிறிது வெங்காயத்தை பொடிப் பொடியாக நறுக்கி அதனுடன் சேர்த்து பொன்னிறமாக வறுத்து ரசத்துடன் சேர்த்தால்போதும்.

☒ பாவற்காய் சீக்கிரம் பழுத்துவிடும். பாவற்காய்களை இரண்டிரண்டாக கீறி வைத்துவிட்டால் பழுக்காது.

# ஆட்கடத்தல் முகவர்களிடம் சிக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் கோரிக்கை

சட்டவிரோத மனித கடத்தலை மேற்கொள்ளும் முகவர்களிடம் வெளிநாடு செல்ல முனையும் எமது இளைஞர்கள் சிக்கிக் கொள்ளாது முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது அவசியம் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தொழில் வாய்ப்புகளைத் தேடி ஆபத்தான கடற்பயணங்களை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள நமது இளைஞர்கள் இந்த இக்கட்டான நிலைமையில் இருந்து விடுபட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரும் பணம் ஈட்டும் நோக்கில் ஆசை வார்த்தைகள் கூறி அழைத்துச் செல்லும் இந்த ஆபத்தான மனித கடத்தல் முகவர்களின் முயற்சிகளைத் தடுக்க முன்வருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அமைப்புகளிடம் வேண்டுகோள் விடுத்து அவர் வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த ஒருமாத காலத்தில் மாத்திரம் அவுஸ்ரேலியாவுக்கு அழைத்துச் செல்லவென நமது நாட்டில் இருந்து மட்டுமன்றி தெற்காசிய நாடுகள் பலவற்றில் இருந்தும் கிறிஸ்மஸ் தீவை நோக்கி அழைத்துச் செல்லப்பட்ட பெரும் எண்ணிக்கையானோரில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயணித்த படகு கவிழ்ந்ததில் மரணித்துள்ளதுடன் பலர் காணாமற் போயும் சிலர் காவல்துறையினரால் கைதாகி உள்ளூர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டும் உள்ளனர்.

தவிர பாதுகாப்பாகக் கரை சேர்ந்தவர்களும் கூட எண்ணிக்கையில் அதிகமாக இருந்தமை காரணமாக அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அந்நாட்டு அதிகாரிகள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகவும் இதனால் அங்கு அழைத்துச் செல்லப்பட்ட நம்மவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

இவர்களில் பெரும்பாலானோரை அழைத்துச் சென்ற முகவர்கள் படகுடன் தலைமறைவாகியுள்ள நிலையில் தாம் இனி எங்கு எவ்வாறு நகர்வது என்பது எதுவும் புரியாத நிலையில் நடுத்தெருவில் விடப்பட்டவர்களின் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையில் இவ்வாறான ஆபத்துக்களைத் தாம் சந்திப்போம் என எதிர்பார்த்திராத நிலையில் இந்த இக்கட்டான பாதுகாப்பற்ற கடற்பயணங்களைத் தொடர எம்மவர்களிடம் புலிகள் தமது மண்மீட்புக்காக எனக் கூறி பெரும்தொகையான நிதியினை வசூலித்துக் கொண்ட இந்த நிலைமையின் பின்னால் இந்த ஆட்கடத்தலும் பிரதான வருமானம் தரும் ஒரு தொழில் முறையாக உணரப்பட்டதன் பின்னர் இதனை போருக்குப் பின்னரும் நமது மக்களிடையே தொடர நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கதொரு நிலைமையாகும்.

இதில் போர்ச் சூழலின் போது மனிதக் கடத்தலை மேற்கொண்டு பெரும் பணம் ஈட்டிய கடத்தல் முகவர்கள் இந்த அமைதியான சூழலிலும் தம் மனிதக்கடத்தலுக்கு வசதியாக அரசுக்கு எதிரான பரப்புரைகளை புலம்பெயர்ந்த நாடுகளிலும் மேற்கொண்டு தமது கடத்தல் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருப்பது கண்டிக்கத்தக்கதும் தடுக்கப்பட வேண்டியதுமாகும்.

இந்த நிலை மாற வேண்டும். இந்த ஆபத்தான சூழல் தடுக்கப்பட வேண்டும். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் நமது இளைஞர்களுக்கு என புதிய தொழில் முயற்சிகளைத் தேடிக் கொள்வதற்கான பல திட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. இனிவரும் காலங்களிலும் பொருத்தமான வேலையைத் தேடிக் கொள்வதற்கான எமது முயற்சிகள் முடிந்தவரை எம்மால் மேற்கொள்ளப்படும் என்பதையும் இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

தொழில் வாய்ப்பைத் தேடிச் செல்லும் நம்மவருக்குச் சட்டரீதியான உரிய பாதுகாப்புடன் கூடிய பொருத்தமான வேலைகளை வெளிநாடுகளில் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் திணைக்களங்கள் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் இப்பயணத்திற்காக தமது பெருந்தொகை பணத்தை மட்டுமன்றி தமது உயிரையும் இழக்கும் ஆபத்தான நிலைமைகளைத் தடுக்கத் தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை அரசு மேற்கொண்டு உதவ வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகில் ஊழல் மோசடி மிக்க ஆட்சி



(கொழும்பு)

உலகின் மிகவும் அதிகமாக ஊழல் மோசடி இடம்பெறும் நாடாக இலங்கை மாறியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் உலகின் ஏனைய நாடுகளை முந்திக் கொண்டு இந்த அரசாங்கம் ஊழல் மோசடிகளை செய்கின்றது.

உழல் மோசடிகளில் ஈடுபட்ட ஏனைய அரசாங்கங்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்கப் பணத்தை களவாடியுள்ளனர், சிலர் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களின் போது தரகுப் பணம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும் ஊழியர் சேமலாப நிதியில் எவரும் கை வைத்ததில்லை.

ஒலிம்பிக்கில் சாதனை நிகழ்த்த முடியாத காரணத்தினால் அரசாங்கம் ஒலிம்பிக் சாதனை நிகழ்த்தியுள்ளது.

அதாவது தொழிலாளர்களின் ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் பணங்கள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன என ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

## பரீட்சை நிலையங்களுக்கருகில் கூட்டங்கள், பட்டாசுகளுக்குத் தடை

(கொழும்பு)

க.பொ.த. உயர்தர பரீட்சை நிலையங்களாக பயன் படுத்தப்படும் பாடசாலைகளிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டத்திற்குள் அரசியல் கூட்டங்களை நடத்துதல், பட்டாசு கொளுத்துதல், ஒலிபெருக்கிகளை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் திணைக்களம் தடைவிதித்துள்ளது.

இவ்வருட க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் ஆகஸ்ட் 6 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வேட்பாளர்கள் மற்றும் அரசியல்கட்சிகளின் இடையூறுகளின்றி இப்பரீட்சைகள் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணையாளருடன் இணைந்து தான் மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல்களை பிறப்பித்துள்ளார். பரீட்சை நிலையங்களிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டத்திற்குள் இடையூறு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் தடுக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

இம்முறை புதிய பாடத்திட்டத்தின் கீழ் 235,774 மாணவர்களும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் 41,324 மாணவர்களும் பரீட்சை எழுதவுள்ளனர் பரீட்சை கடமைகளில் சுமார் 12,000 உத்தியோகஸ்தர்கள் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் கடும் வறட்சி மின்விநியோகம் தடைப்படும் அபாயம்

நாட்டில் இன்னும் மூன்று வாரங்களில் நீர் மின் விநியோகம் முற்று முழுதாக தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் நாட்டில் வறட்சி ஏற்பட்டுள்ள காரணத்தினால் நீர் மின் உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலைமை நீடித்தால் மூன்று வாரங்களில் நீர் மின் உற்பத்தி முற்று முழுதாக நிறுத்தப்படும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர் மின் உற்பத்தி தடைப்பட்ட போதிலும் அனல் மின் உற்பத்தி சீராக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர். எனினும் ஆகஸ்ட் மாதம் முழுவதும் வறட்சி நிலவினால் மின் வெட்டை அமுல்படுத்த நேரிடும் என தெரிவித்துள்ளனர்.

## குழந்தையின் சுகாதாரமானது தாயின் கருவறையில் ஆரம்பிக்கிறது

### வைத்திய கலாநிதி ரி.ஜெயரதன்

(வவுனியா)

ஒரு குழந்தையின் சுகாதாரமானது தாயின் கருவறையில் ஆரம்பிக்கின்றது. இவ்வாறான சுகாதாரமுறையானது மிகவும் முக்கியமான அடித்தளத்தினை கொண்டதாகும் என தாய் சேய் குடும்பநல வைத்தியநிபுணர் வைத்தியகலாநிதி ரி. ஜெயரதன் தெரிவித்தார்.

வவுனியா வைரவபுளியங்குளம் இளவேனில் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையத்தின் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

குழந்தை பிறந்து அடுத்த இரண்டு வருடங்களும முக்கியமானதாகும். அடுத்து பாலர் பகுதியான இரண்டரை வயதுவரையும் சுகாதாரம் முக்கியப்படுத்தப்படும் விடயமாக காணப்படுகின்றது. ஏனெனில் குழந்தையின் மூளை வளர்ச்சியில் இப்பகுதியிலேயே 75 வீதமானது வளர்ச்சி அடைகின்றது. ஆகவே குழந்தை பிறந்ததில் இருந்து தாய்பபாலூட்டலும் அதன்பின்னர் தாய்ப்பாலுடன் மேலதிக ஆகாரமூட்டலும் குழந்தையின் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கின்றது.

இலங்கையில் நடந்த ஆய்வில் குறிப்பிடப்பட்ட ஓர் விடயம் 92 சதவீத தாய் மார் ஆறு மாதம் வரையும் தாய்ப்பலூட்டுகின்றனர் பின்னர் ஆறு மாதத்தில் இருந்து மேலதிக ஆகாரம் கொடுக்கின்றார்கள். ஆனால் குழந்தையின் தரத்திற்கு ஏற்ப சத்துக்கேற்ப வயதுக்கேற்ப ஆகாரம் கொடுப்பது குறைவு. எமது நாட்டில் பார்த்தால் 33.4 வீத தாய்மார்களே சரியான விகிதாசாரத்தில் மேலதிக உணவுகளை குழந்தைகளுக்கு வழங்கி வருகின்றனர். இது மிக மிக குறைவானதாகும். மேலதிக உணவுகளிளை தேர்ந்தெடுத்து அனைத்து சத்துக்களும் அடங்கியதாக குழநதைகளுக்கு கொடுக்க வேண்டும.

75 வீதமான மூளை வளர்ச்சி காணப்படுமாயின் முன்னைய கல்வித்திறன் அதாவது செயற்பாடு பாதிக்கப்படும். எனவே இக்காலப்பகுதியில் குழந்தைகளை கவனிக்காது விட்டால் பின்னர் பிள்ளைகளை கவனித்து முன்னேற்றம் காண்பது என்பது கடினமானதாகும். எமது நாட்டில் போசாக்கு சத்து குறைபாடு 25 சத வீதம் இருக்கின்றது. எனவே பிள்ளைகளின் நிறை மற்றும் உயரம் காலம் தவறாது அளக்கப்பட்டு பிள்ளைகளின் போசாக்கில் கவனம் செலுத்த வேணடும் என தெரிவித்தார். (160)

## இனவாதத்தைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்யக் கூடாது

(கொழும்பு)

இனவாதத்தைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்யக் கூடாது என தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் அரசியல் கட்சிகளிடம் கோரியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இனவாத அடிப்படையில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. 30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் நாட்டில் தற்போது அமைதி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் நிலைமையில் மீளவும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்யக் கூடாது. கடந்த கால அனுபவங்களை பாடமாகக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமானது.

அரசியல் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மக்களுக்கு தெளிவுபடுத்தி அதன் மூலம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டுமென தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் அரசியல் கட்சிகளிடம் கோரியுள்ளது.

அளவையியலும் விஞ்ஞானமுறையும்

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (A/L) Examination model Paper

ஆசிரியர் : W.காண்டீபன் (தீபன் மாஸ்டர்)

02 | T | II

Grade - 13

*(தொடர்ச்சி).....*

### 11. பல்பெறுமான அளவையியல்

அண்மைக்காலங்களில் பாரம்பரிய இரட்டைப் பெறுமான (உண்மை, பொய்) முறையிலிருந்து நீங்கி அதிக பெறுமானங்களைக் கொண்ட முறைகளை விளக்க அளவையியல் முயல்கிறது. நியம அளவையியல் உண்மை அல்லது பொய் எனும் இரு பெறுமானமுள்ள எடுப்புக்களை பயன்படுத்துகின்றது. இதேவேளை முப்பெறுமானமுறை ஒன்றை உருவாக்க சிலர் முனைகின்றனர். உதாரணமாக உண்மை, பொய், இரண்டுமல்லாதன என்ற பெறுமானங்களை உருவாக்க முனைகின்றனர். இந்திய அளவையியல் முறைகள் சிலவற்றில் இவ்வகையான அடிப்படைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உதா:- சதுஸ்கோடி

### 12. சதுஸ்கோடி தர்க்க முறை

யாதாயினும் ஒரு விடயம் தொடர்பான கூற்றினை நான்கு படி நிலைகளாக அமைத்துக் கொள்வது சதுஸ்கோடி தர்க்கமுறையின் பண்பாகும். பௌத்த அளவையியல் சதுஸ்கோடி அளவையியல் என அழைக்கப்படுகின்றது. இதன் தர்க்க வடிவம் வாதப்பிரதிவாதங்களுக்கு வழிவகுக்கின்றது. சதுஸ்கோடியில் இயங்கும் 4 நிலைகள் பின்வருமாறு:-

1. உண்டு - உலகம் முடிவுள்ளது.
2. இல்லை - உலகம் முடிவற்றது.
3. உண்டு அதேபோல் இல்லை - உலகம் முடிவுள்ளதும் முடிவற்றதும்.
4. இருப்பதாகவும் இல்லை இல்லாததாகவும் இல்லை - உலகம் முடிவற்றதாகவும் இல்லை முடிவு இல்லாததாகவும் இல்லை.

### 13. பதத்தின் கருத்துக் குறிப்பும் அகலக்குறிப்பும்

ஓர் பதம் குறிப்பிடுகின்றபோது அப்பதத்தினூடாக ஏதாவது இயல்பு அல்லது தன்மைகளைப் புரிந்து கொள்ள முடியுமாயின் அப்பதத்தினைக் கருத்துக் குறிப்புடைய பதம் என்பர். ஓர் பதம் குறிப்பிடுகின்ற அங்கத்துவத்தினை எண்ணிட முடியுமாயின் அகலக் குறிப்புடைய பதம் என்பர்.

### 14. சமச்சீரான தொடர்பு

இருபதங்களுக்கு இடையே அதாவது 1 ஆவது பதத்திற்கும் 2 ஆவது பதத்திற்கும் இடையே காணப்படுகின்ற தொடர் மீள 2 ஆவது பதத்திற்கும் 1 ஆவது பதத்திற்கும் இடையே தொடர்பு நிலவுமாயின் அதனைச் சமச் சீரான தொடர்பு என்கிறோம் பொதுவாக பின்வரும் பதங்களை பிரயோகிக கும் போது இவ்வகையான தொடர்பு நிலவுகின்றது. நண்பன், சகோதரன், சமகாலத்தவன், சமன், சமீபமாக போன்ற பதங்கள் பிரயோகிக்கப்படும்.

உதா:- A யின் நண்பன் B

B யின் நண்பன் A

### 15. சமச்சீர் அற்றதொடர்பு

இரண்டு பதங்களுக்கிடையே அதாவது 1 ஆவது பதத்திற்கும் 2 ஆவது பதத்திற்கும் இடையே காணப்படுகின்ற தொடர்புமீள 2 ஆவது பதத்திற்கும் 1 ஆவது பதத்திற்கும் காணப்படாதுவிடின் அதனைச் சமச்சீரற்ற தொடர்பு என்கிறோம். பொதுவாக பின்வரும் பதங்கள் பிரயோகிக்கப்படுகின்றது. தந்தை மூத்தவன், உயரமானவன் போன்ற பதங்கள் பிரயோகிக்கப்படுகின்ற போது சமச்சீரற்ற தொடர்பு நிலவும்.

உதா:- 1) A யின் தந்தை B

∴ B யின் தந்தை A என அனுமானிக்க முடியாது.

2) A யிலும் உயரமானவன் B

∴ B யிலும் உயரமானவன் A என அனுமானிக்க முடியாது.

### 16. கலப்பு உறழ்வு நியாயத்தொடை

உறழ்வு, அறிதி வகை எடுப்புக்களால் ஆக்கப்பட்ட ஒரு நியாயத்தொடையே கலப்பு உறழ்வு நியாயத்தொடை எனப்படும்.

உதா:- இராமன் கட்டையானவன் அல்லது இலக்குமணன் உயரமானவன்.

இராமன் கட்டையானவன் அல்ல ∴ இலக்குமணன் உயரமானவன்.

### 17. உருக்கள்

நியாயத்தொடையின் எடுகூற்றுக்கள் இரண்டிலும் மத்தியபதம் இயங்குவதால் எழும் வடிவமே நியாயத்தொடையிலே உரு எனப்படும். மத்தியபதம் ஓர் எடுகூற்றில் எழுவாயாகவோ அல்லது பயனிலையாகவோ இயங்கக்கூடும்.

1. முதலாம் உருபு MP $\frac{SM}{SP}$
2. இரண்டாம் உருபு PM $\frac{SM}{SP}$
3. மூன்றாம் உருபு MP $\frac{MS}{SP}$
4. நான்காம் உருபு PM $\frac{MS}{SP}$

### 18. நியாயத்தொடை ஆகாரங்கள்

நியாயத்தொடையிலுள்ள மூன்று எடுப்புக்களினதும் அளவு பண்பு என்பவற்றால் அமையும் வடிவமே ஆகாரங்கள் எனப்படும்.

உதா:- AAA, EAE, AOO

ஒவ்வொரு நியாயத்தொடை உருக்களிலும் பல ஆகாரங்கள் அமையலாம். ஆனால் ஒவ்வொரு நியாயத்தொடை உருவிலும் அமையும். எல்லா ஆகாரங்களுமே வலிமையானவை அல்ல. ஓர் உருவில் உள்ள ஆகாரம் வலிமையானதாக அமையவேண்டுமாயின் நியாயத்தொடை விதிகளுக்கும் அமைவானதாக இருக்க வேண்டும்.

முதலாம் உருவில் 4 ஆம் இரண்டாம் உருவில் 4 ஆம் மூன்றாம் உருவில் 6 ஆம் நான்காம் உருவில் 5 மொத்தமாக 19 வலிமையான சிறப்பு ஆகாரங்கள் (பிரகாரங்கள்) உள்ளன.

### 19. இருதலைக் கோள் (இருதலைக் கொள்ளி)

பேரெடு கூற்றினை கூட்டு நிபந்தனை எடுப்பாகவும், சிற்றெடு கூற்றினை உறழ்வெடுப்பாகவும் கொண்டமைந்த ஓர் நியாயத்தொடை இருதலைக் கோள் எனப்படும். முடிவு அறிதியாகவோ அல்லது உறழ்வெடுப்பாகவோ அமையலாம். இதன் முடிவு அறுதியாகக் காணப்படுமாயின் அது எளிய இருதலைக்கோள் எனப்படும். முடிவு உறழ்வெடுப்பாய் அமையுமாயின் அது சிக்கல் இருதலைக்கோள்.

இருதலைக்கோள் 4 வகைப்படும்.

1. எளிய ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்
2. எளிய அழிவுப்பாட்டு இருதலைக்கோள்
3. சிக்கல் ஆக்கப்பாட்டு இருதலைக்கோள்
4. சிக்கல் அழிவு இருதலைக்கோள்

### 20. குறைநியாயத்தொடை (சுருக்க நியாயத்தொடை)

நியாயத்தொடையிலுள்ள மூன்று கூற்றுக்களில் ஏதேனும் ஒன்றைக் குறைப்பதன் மூலம் வருவதே குறை நியாயத்தொடை எனப்படும்.

குறை நியாயத்தொடை 3 வகைப்படும்.

1. பேரெடு கூற்று நீக்கப்பட்ட நியாயத் தொடை (1ஆம் வரிசை)
2. சிற்றெடு கூற்று நீக்கப்பட்ட நியாயத்தொடை (2ஆம் வரிசை)
3. முடிவுகூற்று நீக்கப்பட்ட நியாயத்தொடை (3ஆம் வரிசை)

### 21. முரனுரை

ஒரு தீர்ப்பானது உண்மை என்ற முடிவைப் பெற்றபோது அதேபோல் பொய் என்ற முடிவைப் பெறும் ஆயின் பொய் என்ற முடிவு உண்மை என்ற முடிவைப் பெறும் ஆயின் அது முரனுரை எனப்படும்.

உதா:- எல்லா அமெரிக்கர்களும் பொய் கூறுபவர் என அமெரிக்க ஜனாதிபதி கூறினார். இது உண்மையாயின் அவர் கூறுவது பொய்யாகும். இது பொய்யாயின் அவர் கூறுவது உண்மையாகும்.

### 22. சியாத் வாதம்

ஜைனர்களால் முன்வைக்கப்பட்ட சியாத்வாதம் சப்தபாங்கி முறை என்னும் கூறப்படும். "சியார்" என்றால் இருக்கலாம் எனப் பொருள். ஜைனரிடம் ஏழுதொகுதி மாற்றுக்கள் இருந்தன. ஒவ்வொரு நிலைக்கும் இவை ஏற்புடையதாகப் பயன்படுத்தப்பட்டன.

### 23. தர்க்கம்

வாதித்தல் அல்லது தர்க்கித்தல் எனப்பொருள். இப்பதம் இந்திய அளவையியல் முறையில் கையாளப்படுகின்றது. நியாயத்தர்க்கம் இந்திய அளவையியல் முறையில் அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. பேத்து பாச போலிகளை விட வேறு பல போலிகளை விட வேறு பல போலிகளுக்கும் தர்க்கமுறையின் மூலம் விளக்கப்படுகின்றது.

### 24. பிரதியட்சம்

பிரமாணம் இந்திய அளவையியலில் அறிவின் புலன் கருவியாகப் பாவிக்கப்படும் போது பிரதியட்சம் அறிவின் ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. பிரதியட்சத்திற்கான இயல்பு இந்திய அளவையியலில் பேணப்படுகின்றது.

சவிகல்ப, நிவிகல்ப என்பவற்றுக்கிடையே முரண்பாடுகள் உண்டு. ஞானமார்க்கம் மாற்றமுடையதும் மாறாததுமான காட்சியாகும்.

### 25. சுவார்த்தனுமானம் (தன்பொருட் அனுமானம்)

தான் தனக்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனுமானம் சுவார்த்தனுமானம் எனப்படும். இது நான்கு படி நிலைகளைக் கொண்டிருக்கும்.

1. ஹேது - மலையில் புகையுள்ளது.
2. வியாப்தி - புகையிருப்பின் தீயிருக்கும்.
3. பத்ய - புகை மலையில் உள்ளது.
4. சத்திய - தீ உள்ளது.

### 26. பாராத்த அனுமானம் (பிறர் பொருட் அனுமானம்)

மற்றவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட அனுமானம் பாராத்த அனுமானம் எனப்படும். இது 5 படிநிலைகளைக் கொண்டிருக்கும்.

1. பிரத்தியான - மலையில் தீ உள்ளது.
2. ஹேது - ஏனெனில் அங்கு புகையுள்ளது.
3. உதாரணம் - எங்கு புகையிருக்குமோ அங்கு தீயிருக்கும். சமயலறையைப்போல்
4. உபனய - தீயுடன் தொடர்புள்ள குகைம்லையில் காணப்படுகின்றது.
4. நிகமன - ஆகவே அந்த மலையில் தீ உள்ளது.

**27. பகுப்பாய்வு வரைவிலக்கணம்**

யாதானினும் ஒன்றின் வகுதியினையும் அதன் இன்றியமையாய்ப் பண்புகளினையும் கூறுவதன் மூலம் நிகழ்த்தப்படும். வரைவிலக்கணமே பகுப்பாய்வு வரைவிலக்கணம் எனப்படும்.

உதா:- நாய் என்பது நன்றியுள்ள பிராணி

**28. நியமப்போலி**

விதிகள் அல்லது நியமங்களை மீறுவதனால் ஏற்படும் போலி நியமப்போலி ஆகும்.

உதா:- காற்றடித்தால் மரங்கள் முறியும்
மரங்கள் முறிந்துள்ளது.
∴ காற்றடித்துள்ளது.

**29. உரையாடல் உலகு**

எதிர் மறைப்பதங்களைச் சேர்ப்பதன் மூலம் பெறப்படுவது உரையாடல் உலகு ஆகும்.

உதா:- சிறுவர்கள் எனும் வகுப்பை நோக்கும் போது அதன் உரையாடல் உலகு சிறுவர்களையும் சிறுவர்களல்லாதவர்களையும் சேர்க்கும் போது பெறப்படுகிறது.

A - சிறுவர் வகுப்பு
A - சிறுவர் அல்லாதன

**30. போதிய நியாய விதி**

காரண முதல்வாதியான "லைபினிட்ஸ்" என்பவரால் முன்வைக்கப் பட்டது. யாதாயினும் ஒரு விடயம் அல்லது பொருள் அது தானாகவும் அல்லாமலும் இருப்பதற்கு போதிய காரணத்தினை அல்லது நியாயத்தினை கொண்டிருக்கின்றது என "லைபினிட்ஸ்" கூறினார்.

உதா:- ஒரு குற்றவாளி செய்த குற்றங்களுக்கு போதிய ஆதாரத்தைக் காட்டவேண்டும்.

**31. சிந்தனை விதிகள்**

தாக்கரீதியான சிந்தனைக்கான சில இன்றியமையாத்தத்துவங்களே சிந்தனை விதிகளாகும். இவ்விதிகள் அனுபவவாயிலாக பெறப்பட்டவை அல்ல பாரம்பரிய அளவையியலில் மூன்று சிந்தனை விதிகள் உள்ளன. அவை ஒருமை விதி, எதிர்மறை விதி, விலக்கிய நடுப்பதவிதி என்பனவாகும்.

**32. எதிர்மறையும் மறுதலையும்**

இரு பதங்களுக்கிடையே காணப்படும் தொடர்பு எதிர்மறையாகவும், மறுதலையாகவும் இருக்கலாம். ஏதேனும் ஒரு தொடர்பின் போது விதிப்ப தால் கூறப்படும் பண்பின்மையை எதிர் மறைப்பதம் குறிக்கின்றது.

உதா:- வெள்ளை - வெள்ளை அல்லாதன இங்கு இரு எதிர்மறை களையும் இணைக்கும் போது முழுவகுப்பும் பெறப்படும். விதிப்பதத்தின் மறையைக் கூறும் அதேநேரத்தில் இன்னொன்றினை உண்மையைக் கூறுகின்ற பதம் மறுதலைப்பதம் ஆகும்.

உதா:- வெள்ளை, கறுப்பு இங்கு இவ்விருகளையும் சேர்ப்பதன் மூலம் முழுவதுவம் பெறமுடியாது.

**33. இசையும் வாய்ப்பும்**

வாதம் ஒன்று அளவையியல் விதிகளுக்கு அமைத்து வாய்ப்பாக இருக்கும் அதேவேளை அதன் எடுத்துக்கூற்றுக்களுக்கிடையே தர்க்க நியம ரீதியில் இசைவு கொண்டிருந்தால் அது இசையும் வாய்ப்புமாக அமையும்.

*உதா:-*

நாற்காலி எல்லாம் நான்கு கால் உடையனவாகும்.
முக்காலி எல்லாம் நான்கு கால்களினால் அமைக்கப்பட்ட தளவுருவம் அல்ல
∴ முக்காலி எல்லாம் நாற்காலி அல்ல.

**34. கணினி விஞ்ஞானத்தின் பயன்பாடுகள்**

- செம்மையான தகவல்களையும் முடிவுகளையும் தருகின்றது.
- விரைவான செயற்பாட்டைக் கொண்டது.
- பகுத்தறியவும் தொகுத்தறியவும் உதவும்
- கணிதத்தின் பயன்பாட்டை கணினி மூலம் பெறலாம்.

**35. இயற்கை மொழியும் குறியீட்டு மொழியும்**

இவ்விரண்டிலும் தர்க்கமுறைகள் உண்டு குறியீட்டு மொழியின் தர்க்கத் தொடர்புகளை வெளிப்படுத்தும் போது கருத்துக்குழப்பம், உணர்ச்சி, மயக்கம் போன்று ஏற்படும் குறியீட்டு மொழியின் இவை நிவர்த்தி செய்யப்படுகின்றன.

உதா:- இயற்கை மொழி - காற்றடிக்குமாயின் மரங்கள் முறியும் அத்துடன் விறகின் விலை குறைவடையும்.

குறியீட்டு மொழி P - காற்றடிக்கும்
Q - மரங்கள் முறிதல்
R - விறகின் விலை குறைதல்
$P - (Q \wedge R)$

**36. வாய்ப்பும் உண்மையும்**

ஒரு வாதம் அல்லது அனுமானம் வாய்ப்பானதாகவோ அல்லது வாய்ப்பற்றதாகவோ அமையலாம். ஒரு வாதத்தின் வாய்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுமான விதிகள் அல்லது அளவையியல் விதிகளுக்கு அமைவானதாகக் காணப்படுமாயின் அது வாய்ப்பானதாகக் கொள்ளப்படும். உண்மை பொய் என்பது வாதத்தில் வரும் எடுப்புக்கள் உண்மையானதாகவோ அல்லது பொய்யான தாகவோ அமையலாம். அவதானிக்கப்பட்ட காரணிகளோடு அல்லது உள்ள நிலைகளோடு இசைவற்ற எடுப்பு பொய்யாகும். வாய்ப்பான வாதமொன்றில் எடுகூற்றுக்கள் உண்மையாக இருப்பின் அதன் முடிவும் கட்டாயம் உண்மையாகவே இருக்கும்.

**37. அளவையியல் பயன்கள்**

1. வலிதான சிந்தனைக்கு உதவியாகின்றது.
2. அளவையியலில் பயிற்சி பெற்ற ஒருவர் நியாய முறையில் உள்ள குறைபாடுகளை விரைவில் அறிந்து கொள்ள முடியும். வாதங்களிலுள்ள போலிகளை இலகுவாக இனங்காணமுடியும்.
3. மொழியைத் தெளிவாகவும், நுட்பமாகவும் உபயோகிக்க முடியும்.
4. விஞ்ஞான ஊகங்கள், விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் முறைகள் கோட்பாடுகளில் அளவையியல் அனுமான முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன.
5. அளவையியல் இன்று கணிதத்துடனும் கணினி விஞ்ஞானத்துடனும் தொடர்புபட்டுள்ளது.
6. பிறர் நலன்களை இனங்கண்டுகொள்ள உதவுகின்றது.

**38. நற்சூத்திரங்கள்**

அளவையியல் முறைகளை அனுசரித்து, குறியீட்டு அளவையியல் மொழியின் விதிகளுக்கு அமைவாக உள்ள வாக்கியங்களே நற்சூத் திரங்கள் எனப்படும். (ஒழுங்கான மாறிகள், மாறிலிகள், அடைப்புக் குறிகள் பயன்படுத்தப்படுவதாகும்).

(குறியீட்டு வாக்கியம் அல்லாதன)

உதா:- $(P \rightarrow Q)$
$[(P \rightarrow Q) \rightarrow R]$
$[P \rightarrow (Q \wedge R)]$

உதா:- $[P \rightarrow (Q \wedge R)]$
PUQ
P→அவன் நன்றியுள்ளவன்)

**39. பதங்களின் வியாப்தி**

ஒரு எடுப்பில் ஒரு பதங்குக்கும் வகுப்பில் அடங்கும் எல்லா அங்கத்துவங்களுமே உணர்த்தப்பட்டுள்ளதா அல்லது அவற்றின் ஒரு பகுதி அங்கத்துவங்கள் மாத்திரமே உணர்த்தப்பட்டுள்ளதா என்பது பற்றிய விளக்கம் பதங்களின் வியாப்தி பற்றிய விளக்கம் இதனை இரண்டாகப் பிரிக்கலாம்.

1. வியாப்தி உடைய பதம்
2. வியாப்தி அற்றபதம்

**வியாப்தி உடைய பதம்:-** ஓர் எடுப்பில் ஓர் பதம் குறிக்கும் வகுப்பில் அடங்கும் எல்லா அங்கத்துவங்களும் உணர்த்தப்படுமாயின் அதுவே வியாப்தி உடைய பதம் எனப்படும்.

**வியாப்தி அற்றபதம் :-** ஓர், எடுப்பில் குறிக்கும் வகுப்பில் அடங்கும் ஒரு பகுதி அங்கத்துவங்கள் மாத்திரம் உணர்த்தப்படுமாயின் வியாப்தி அற்ற பதமாகும்.

| எடுப்பு | வியாப்தி | வியாப்தி அற்றது |
|---|---|---|
| A | √ | X |
| E | √ | √ |
| I | x | x |
| O | x | √ |

40. தேற்றங்கள்

எடு கூற்றுக்கள் இல்லாத வலிதான முடிவு ஒன்றை பொருத்தமான அனுமான விதிகளை கொண்டு நிறுவிக்கொள்வது ஆகும்.

உதா:- தேற்றம் $(P \rightarrow P)$
1. $(P \rightarrow P)$
2. P நி.பெ.எ
3. P 2 மீ.வீ

**41. தூய அறிதி நியாயத்தொடை**

மூன்று கூற்றுக்களையும் அறிதி எடுப்புக்களாகக் கொண்டமைந்த ஒரு நியாயத்தொடையே தூய அறிதி நியாயத்தொடை எனப்படும்.

உதா:- எல்லா மக்களும் அழகானவை ஆகும்.
ரோஜாக்கள் எல்லாம் மலர்கள் ஆகும்.
ரோஜாக்கள் எல்லாம் அழகானவை.

(தொடரும்)....

# இந்தியா- பாகிஸ்தான் நல்லுறவுக்கு இரகசிய சுரங்கப்பாதை குந்தகம்



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரகசிய சுரங்கப் பாதை, இந்தியா- பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நல்லுறவை சீர்குலைக்க வழிவகுக்கும் என்று எல்லைப் பாதுகாப்பு படை தலைவர் யூ.கே. பன்சல் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள காஷ்மீரின் சம்பா மாவட்டம் சச்வால் பகுதியில் 400 மீற்றர் தூரத்துக்கு பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டிருந்த இரகசிய சுரங்க பாதையை, கடந்த யூலை 28ம் திகதி பாதுகாப்பு படையினர் கண்டுபிடித்தனர்.

இச்சுரங்கம் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தொடங்கி இந்தியாவிற்குள் நுழையும் பொருட்டு அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதனை நேற்று முன்தினம் பார்வையிட்டு, ஆய்வு செய்த எல்லைப் பாதுகாப்பு படையின் தலைவர் யூ.கே. பன்சல் இது குறித்து ஊடகங்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் நுழையும் வகையில் இரகசியமாக அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதை, இந்தியா- பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே நல்லுறவை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் செயலாக அமையும்.

இது இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு நிலைகளில் மேற்கொண்டு வரும் நம்பிக்கையான பேச்சுவார்த்தையை இது போன்ற முறைகேடான செயல்கள் கெடுக்கக்கூடியது.

இதையடுத்து பிரச்சினைக்குரிய பகுதிகளில் கூடுதல் கவனம செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அவர்கள் எப்படி சுரங்கப்பாதையை அமைத்தார்கள் என்பதை கண்டறிந்து, இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காத வண்ணம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

# இந்தியாவில் தொழில் தொடங்க ஜப்பான் விருப்பம்



ஜப்பான், இந்தியாவில் தொழில் தொடங்கும் பொருட்டு மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக மத்திய அமைச்சர் மு.க. அழகிரி தெரிவித்துள்ளார்.

கடந்த யூலை 24ஆம் திகதி மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் மு.க.அழகிரி அரசு முறை பயணமாக ஜப்பான் சென்றார்.

அவருடன் இரசாயனத் துறையின் மத்திய செயலாளர் ஜோஸ் சிரியாக் உள்பட அரசு அதிகாரிகளும் சென்றனர்.


ஜப்பான் நாட்டின் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தைச் சேர்ந்தோர் மற்றும் இரசாயன தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தோரையும் அழகிரி சந்தித்துப் பேசினார்.

இந்தப் பயணம் முடிந்து நேற்று முன்தினம் அதிகாலை சென்னை திரும்பிய அழகிரி, ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், ஜப்பானுக்கு அரசு முறை பயணமாகச் சென்றிருந்தேன்.

உரம், இரசாயனம் மற்றும் மருந்து தயாரிப்பு தொடர்பாக ஜப்பான் நாட்டின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். பேச்சுவார்த்தை பயனுள்ளதாக இருந்தது. ஜப்பான் நாட்டினர் இந்தியாவில் தொழில் தொடங்க ஆர்வமாக உள்ளனர் என்றார்.

இந்தியச் செய்திகள்


# நித்தியானந்தாவின் விஸாவுடன் நேபாள வாலிபர் கைது



சுவாமி நித்தியானந்தாவின் கடவுச்சீட்டு உட்பட 32 பேரின் கடவுச்சீட்டுகளை வைத்திருந்த நேபாள வாலிபரை புதுடில்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நிதின் கவுசிக் என்ற இந்த வாலிபர் நேபாளம் தலைநகர் காத்மண்டுவிலிருந்து புதுடில்லிக்கு இண்டிகோ விமானம் மூலம் வந்தார்.

அவரிடம் நடத்திய பரிசோதனையின் போது 32 கடவுச் சீட்டுகள் இருப்பது தெரிய வந்தது. இதில் சுவாமி நித்தியானந்தாவின் கடவுச்சீட்டும் அடங்கும். மற்ற கடவுச்சீட்டுகள் அவருடைய சீடர்கள் உடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.




# ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் அமைதிக்கு இந்தியாவின் பங்கு அளப்பரியது

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை நீடித்ததாகவும் உறுதியானதாகவும் செயற்படுத்த விரும்பும் அமெரிக்காவின் முயற்சியில் இந்தியாவின் பங்கு அளப்பரியது என அமெரிக்க பாதுகாப்புத்துறை இணையமைச்சர் ஆஷ்டன் கார்டர் தெரிவித்துள்ளார்.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் மேற்கொண்ட 10 நாட்கள் சுற்றுப்பயணத்தை முடித்த பின், நியூயோர்க்கில் உள்ள ஆசிய சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆஷ்டன் கார்டர் கலந்து கொண்டார்.


அப்போது அவர் பேசியதாவது: ஆசிய- பசுபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்தும் அமெரிக்காவின் முயற்சியில் இந்தியாவும் பெரும் பங்காற்றுகிறது.

இந்திய - அமெரிக்க உறவு உலகளாவிய நம்பிக்கைக்குரியது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் கடல் பாதுகாப்பு, ஆப்கானிஸ்தானின் பொருளாதார மேம்பாடு, ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப்படைகள் போன்றவற்றில் இந்தியா ஏராளாமான பங்களிப்பைச் செய்திருக்கிறது.

அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் பனேட்டா வேண்டுகோளுக்கிணங்க, இந்தியா சென்றேன். அமெரிக்க கொள்கை மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய உயர்நிலைக் குழுவினரும் உடன் வந்தனர்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனனுடன் ஆலோசனை நடத்தினோம். இதில் வெறும் இராணுவ- வர்த்தக உறவு என்பதைத் தாண்டி, தொழில்நுட்ப பகிர்வு, கூட்டு உற்பத்தி என உறவை மேம்படுத்த விரும்புகிறோம் என்றார்.

# முத்தம் கொடுத்து ஆசீர்வாதம் பெண் சாமியார் மீது தாக்குதல் முயற்சி



கேரளாவில் உள்ள கொல்லம் ஆசிரமத்தில் மாதா அமிர்தானந்தமயி சுவாமியை தாக்க முயன்ற வாலிபரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியாவின் புகழ் பெற்ற சாமியார்களுள் ஒருவர் மாதா அமிர்தானந்தமயி.

இவரின் ஆசிரமம் கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் வள்ளிக்கோவிலில் உள்ளது. வெளிநாட்டு பக்தர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அமிர்தானந்தமயி முத்தம் கொடுத்து ஆசிர்வாதம் வழங்குவார்.

நேற்று முன்தினம் தன்னை சந்திக்க வந்த பக்தர்களுக்கு அவர் ஆசி வழங்கிக் கொண்டு இருந்தபோது அங்கு வந்த வாலிபர் ஒருவர் திடீரென அமர்தானந்தமயியை தாக்க முயன்றார்.

அருகில் இருந்த பாதுகாவலர் அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார். அதனைத்தொடர்ந்து நடந்த விசாரணையில் அந்த நபர் பீகாரைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. இந்தச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மியான்மர் சிறுபான்மையினர் அகதிகளாக இந்தியாவில் தஞ்சம்



மியான்மரில் அரசு குடியுரிமைக்கு அங்கீகரிக்கப்படாத ரோஹிங்கியா இன முஸ்லிம் மக்கள் சிலர் அகதிகளாக சமீபத்தில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

மியான்மரில் வாழும் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்குக் குடியுரிமை கிடையாது. இந்த சிறுபான்மை இனத்தவரின் குழந்தைகள் கல்வி கற்பதற்கும் மருத்துவ சேவையை பெறுவதற்கும் அந்நாட்டில் தடை இருக்கிறது.

இந்நிலையில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இவர்கள், தங்களை அடையாளப் படுத்திக் கொள்ள உரிய ஆவணம் இல்லாமல் தவிக்கின்றனர்.

மேலும் மியான்மரிலிருந்து அகதிகளாக இந்தியா வரும் பெண்கள், அதிகாரிகளின் பலமான தாக்குதல்களைத் தாங்க வேண்டிய சூழ்நிலையும் உள்ளதாக இந்திய சட்டத்தரணி சஹானா பசவபத்னா பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் கூறியுள்ளார்.

மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் 8ஆம் நூற்றாண்டிலேயே குடியேறி விட்ட போதும் மியான்மர் அரசாங்கம் இவர்களைக் குடிமக்களாக மதிப்பதில்லை.

மேலும் மியான்மரின் மேற்கு மாநிலமான ராக்கைனில் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளில் பல நூற்றுக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் பலர் காணாமற் போயும் இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

இதனால் மனித உரிமை ஆர்வலர்கள், உடனடியாக மனிதாபிமான நிவாரணப் பணியை ரோஹிங்கியா அகதிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் மியான்மர் அரசிடம் முஸ்லிம்களைக் குறிவைத்து நிகழ்த்தும் தொந்தரவுகளையும் படுகொலைகளையும் நிறுத்த சொல்ல வேண்டும் எனவும் ஐ.நாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : S. பாவலன்

முகவரி: 5 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

அகவை 4 இல்

# அசாஞ்சேவை விசாரிக்க சுவீடன் அனுமதி மறுப்பு




ஈக்குவேடார் நாட்டில் உள்ள லண்டன் தூதரகத்தில் வைத்து, விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவை விசாரிப்பதற்கு சுவீடன் அரசு அனுமதி தர மறுத்து விட்டது.

விக்கிலீக்ஸைத் தோற்றுவித்த ஊடகவியலரான அசாஞ்சோ, அமெரிக்கா உட்பட பல்வேறு நாட்டின் இரகசியங்களை தனது இணையத்தில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர். அவர் மீது சுவீடன் அரசு பாலியல் வன்முறை வழக்கைப் பதிவு செய்தது. இவ்வழக்கு குறித்து அசாஞ்சோயிடம் விசாரணை நடத்த இலண்டன் அதிகாரிகள் விரும்புகின்றனர்.

ஈக்குவேடர் அரசும் தனது நாட்டிலுள்ள லண்டன் தூதரகத்தில் வைத்து அசாஞ்சேனவ விசாரித்து முடித்தால், அவர் மீது சுமத்தப்பட்ட வழக்கும் ஒரு முடிவைச் சந்திக்கும் என்று கருதுகிறது. ஆனால் குற்றம் சுமத்திய சுவீடன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

இந்நிலையில் விசாரணைக்காக அசாஞ்சே சுவீடனுக்குப் பயணமானால், அந்த அரசு அங்கிருந்து அவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்திவிடும் என்று அசாஞ்சே அஞ்சுகிறார். ஈக்குவேடார் நாட்டிலுள்ள லண்டன் தூதரகத்தை விட்டு வெளியேறினாலும், அவரை சுவீடன் அரசு கைது செய்துவிடும் என்பதால் அவர் அங்கிருந்து வெளியேறவும் விரும்பவில்லை. இதற்கிடையே அதிகாரியும் லண்டன் தூதரகத்தில் வைத்து அவரை விசாரிக்க விரும்பவில்லை என்று கூறிவிட்டார். ஆனால் அதற்கான காரணத்தை அவர் வெளியிடவில்லை.

# உணவுடன் ஸ்டிக்கர் பொம்மைவிற்க சிலிநாடு தடைவிதிப்பு



சிறுவர்களுக்கான உணவுப் பொருட்களுடன் சேர்த்து ஸ்டிக்கர், பொம்மை போன்றவைகளை விற்க சிலி நாடு தடை விதித்துள்ளது. மீறினால் அபராதம் செலுத்த வேண்டும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

சர்வதேச அளவில் உணவுப் பொருட்களை விற்கும் மெக்டொனால்டு, கே.எப்.சி போன்ற நிறுவனங்கள் சிறுவர்களைக் கவர்வதற்காக அதிக கொழுப்பு மிக்க உணவுப் பொருட்களுடன் பொம்மைகள், ஸ்டிக்கர்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றையும் சேர்த்து விற்பனை செய்கின்றன.

பொம்மைகள், ஸ்டிக்கர்கள், ஐஸ்கிரீம்களுக்கு ஆசைப்பட்டு கொழுப்பு மிக்க உணவுகளை சிறுவர்கள் அதிகம் சாப்பிட்டு உடம்பை கெடுத்துக் கொள்கின்றனர்.

எனவே சிறுவர்களுக்காக உணவுகளுடன் இது போன்ற பொருட்களை விற்கக்கூடாது. மீறி விற்றால் அதற்கான அபராதத்தை கட்ட வேண்டும் என சிலி நாட்டின் சுகாதார அமைச்சகம் எச்சரித்துள்ளது.

சான்பிரான்சிஸ்கோவில் உள்ள உணவுக் கூடங்களில் மெக்டொனால்டு நிறுவனம் கொழுப்பு, சர்க்கரை, உப்பு அதிகம் உள்ள உணவுகளுடன், பொம்மைகளை சேர்த்து விற்பதாக வழக்கு தொடரப்பட்டது.

இதே போல நியூயார்க்கிலும் புகார் கூறப்பட்டது. எனினும் மெக்டொனால்டு நிறுவனம் சிறுவர்களை வசீகரிக்கும் பொம்மை, ஐஸ்கிரீம், ஸ்டிக்கர் போன்றவற்றை தொடர்ந்து விற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# சிரிய போராட்டத்திற்கு அமெரிக்கா இரகசிய உதவி




சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக் கோரி போராட்டக்காரர்கள் ஓராணடுக்கும் மேலாக போராடி வருகின்றனர்.

இவர்களை ஒடுக்க அரசு படைகள் நடத்திய தாக்குதலில் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியா மீது பொருளாதார தடை விதிக்கும் தீர்மானத்தை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்தன. ஐ.நா பாதுகாப்பு சபையில் கொண்டு வந்த இந்த தீர்மானத்தை சீனாவும், ரஷ்யாவும் ஆதரிக்கவில்லை.

இதற்கிடையே போராட்டக்காரர்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவது தொடர்பான, இரகசிய ஆதரவு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ஒபாமா கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதை அமெரிக்க வெளியுறவு அதிகாரிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். இதன் காரணமாகத்தான் சிரியாவில் சமீபகாலமாக போராட்டக்காரர்களின் கை ஓங்கியுள்ளது. அலெப்போ நகரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள போராட்டக்காரர்கள் அரசு படைகளை கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

துருக்கியின் அதனா நகரில் அமெரிக்க இராணுவ முகாம் உள்ளது. சிரியா எல்லையில் உள்ள இந்த பகுதியில் இருந்துதான் போராட்டக்காரர்களுக்கு ஏவுகணைகளும், தகவல் தொடர்பு கருவிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.


சவுதி அரேபியா மற்றும் கத்தார் நாட்டில் உள்ள செல்வந்தர்கள் மூலம் போராட்டக்காரர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. சிரிய அரசு படைகளுடன் சண்டையிடுபவர்களுக்காக செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் நிவாரண பொருட்கள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே அரசு படைகளிடம் கைப்பற்றப்பட்ட பீரங்கியை கொண்டு, மெனாக் நகரில் உள்ள விமானப்படை தளத்தை தகர்த்துள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிரியாவுக்கான அமைதி தூதர் பதவியை கோபி அன்னான் இராஜினாமா செய்துள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா சபையின் முன்னாள் பொதுச் செயலாளரான அன்னான், ஐ.நா சபை மற்றும் அரபு நாடுகள் கூட்டமைப்பின் சார்பில் சிரியாவுக்கான அமைதி தூதராக நியமிக்கப்பட்டார்.

இம்மாதம் 31ஆம் திகதியுடன் அவரது பதவிக்காலம் முடிய உள்ள நிலையில், தமது பதவியை புதுப்பிக்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.



லண்டனில் நடைபெற்ற இங்கிலாந்து பிரதமர் டேவிட் காமரூன் (இரண்டாவது வலது) மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் (நடுவில்) சந்திப்பின்போது பேட்டி எடுத்த செய்தியாளர்கள்.

உலகச் செய்திகள்

# பெண்ணுடன் நடமாடியதால் பாக். நீதிபதி இராஜினாமா

பெண் ஒருவருடன் ஆடிப் பாடி நடனமாடிய பாகிஸ்தான் நீதிபதியால் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் கஹானிவால் மாவட்ட சிவில் நீதிபதி முகமது மசூத்பிலால். இவர் தனது சகோதரரின் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற போது, பெண் ஒருவருடன் நடனமாடியுள்ளார்.

இது வீடியோவாக பதிவானதுடன், சமூக வலைதளமான யூரியூப்பிலும் வெளியானது. இந்த விவகாரம் சர்ச்சையை கிளப்பியதால், தனது பதவியை இராஜினாமா செய்தார்.

தனது இராஜினாமா கடிதத்தினை லாகூர் உயர்நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பிவைத்தார். இராஜினாமாவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# வடகொரியாவில் கனமழை 100 பேர் இதுவரை பலி

வட கொரியாவில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் பலத்த மழையால், தாழ்வான பகுதிகளில் உள்ள பெரும்பாலான கிராமங்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன.



தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் ஆறுகளில் அபாய கட்டத்தை தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சில இடங்களில் ஆறுகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்துள்ளது, இதனால் பலியானோர் எண்ணிக்கை 100-ஐத் தாண்டி உள்ளது.

சில அணைகள் உடையும் நிலையில் இருப்பதால் மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஐ.நா சபை முன்வந்துள்ளது. இதே நிலைமை நீடித்தால் சமாளிக்க முடியாமல் பிரச்சினைகள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# 23 ஆண்டுகளின் பின்னர் உயிருடன் வந்த மகன்

## - மகிழ்ச்சியில் தாய் மரணம்



பங்களாதேஷை சேர்ந்த நபர் ஒருவர், 23 ஆண்டுகள் கழித்து உயிருடன் திரும்பி உள்ளது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

முஸல்முதீன் சர்க்கார்(வயது 52) என்பவர் 23 ஆண்டுகளுக்கு முன்பு, கடந்த 1989ஆம் ஆண்டு வேலை தேடி பாகிஸ்தானுக்கு சென்றார்.

அங்கு எல்லைக் காவல் படை அவரை சிறைப் பிடித்து, கராச்சி சிறையில் அடைத்து வைத்தது.

இந்நிலையில் வெகுநாட்களாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய பாகிஸ்தான் அரசு முன்வந்து, பட்டியல் ஒன்றை தயார் செய்தது.


இந்த பட்டியலில் சர்க்கார் பெயர் இடம் பெறவே, செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் இவர் மீட்கப்பட்டு, தனது தாய்நாடான பங்களாதேஷ் வந்து சேர்ந்தார்.

இது குறித்து இவரது தம்பி ஜுல்ஹாசுதீன் கூறுகையில், இது ஒரு நெகிழ்ச்சியான சம்பவம் என்றார்.

சர்க்காரின் தாய், தன் மகனின் வருகையை எதிர்பார்த்து காத்துக் கொண்டேயிருந்தார். மற்றவர்கள் சர்க்கார் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று கருதினர்.

ஆனால் அவர் தாயார் மட்டும் மகன் சாகவில்லை, உயிரோடிக்கிறார் என்று சொல்லிக் கொண்டிருந்தார். இந்நிலையில், விடுதலையான சர்க்கார் வந்து தன் தாயைக் கட்டித் தழுவவும் அந்த ஆனந்தத்திலேயே அவர் உயிர் பிரிந்தது என்றார்.

# யாழில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு பிரிட்டிஷ் எம்.பி.க்களிடம் கோரிக்கை



பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று யாழ் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு வைத்தியசாலைக்குச் சென்ற குழுவினர் பதில் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவரும், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடி வைத்தியசாலை நோயாளர் விடுதிகளைப் பார்வையிட்டதுடன், வைத்தியசாலையின் தேவைகள் குறித்தும் கேட்டறிந் துள்ளனர்.

இதன்போது இருதய சத்திர சிகிச்சைப் பிரிவில் போதிய வசதிகள் இன்மையால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மற்றும் கண்டி ஆகிய வைத்தியசாலைகளுக்கு நோயார்களை அனுப்பிவைக்க வேண்டிய தேவை எற்பட்டுள்ளதால் யாழ். போதனா வைத்திசாலையில் புதிய இருதய சத்திரசிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவர் விடுதி அமைப்பதற்கு 500 மில்லியன் தேவைப்படுவதாகவும் அதனை பிரிட்டன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைத்துத் தருமாறு வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இருதய சிகிச்சைப் பிரிவு அமைப்பது தொடர்பான திட்ட வரைபு ஒன்றும் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட குழுவினர் இது தொடர்பாக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இந்தக் கோரிக்கை தொடர்பாக பரிசிலிப்பதாகத் தெரிவித்துள்ளதாக பதில் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்து பல்வேறு இடங்களுக்கச் சென்று இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த குழவினர் தங்கள் யாழ்ப்பாணப் பயணத்தை நிறைவு செய்து 9.45 மணிக்கு கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டனர். (02, பா)

# பாடசாலைகள் அபிவிருத்தி வேலணையில் ஆரம்பம்

(வேலணை)



மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நேற்று வேலணை பிரதேச சபையின் தவிசாளரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளர் சி.சிவராசா (போல்) நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன், கோட்டக் கல்விப்பணிப்பாளர், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் ப.இத்யானந்தன் மற்றும் பாடசாலை அதிபர்களும் பங்குபற்றினர்.

# கற்குளம் புதிய குடிமனைப் பகுதிக்கு மின்சாரம் இல்லை; மக்கள் விசனம்

(வவுனியா)

வவுனியா கற்குளம் புதிய குடிமனைக்கு கடந்த 5 வருடங்களாக மின்சாரம் வழங்கப்படாமையினால் தாம் பெரிதும் பாதிப்படைவதாகவும், காட்டு விலங்குகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு முகாம்களிலும், வேறு பல இடங்களிலும் வசித்த தம்மைப் புதிய குடியேற்றமெனக் கூறியும், அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதாகவும் தெரிவித்து வவுனியாவின் எல்லையோரமுள்ள காட்டுப் பகுதியைத் துப்பரவு செய்து குடியமர்த்தியிருத்தனர் எனத் தெரிவிக்கும் அம் மக்கள் தாம் குடியிருந்த காலத்தில் இருந்து மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதன் காரணமாக தமது கிராமத்திற்கு பின்புறமாகவுள்ள காட்டுப்பகுதியில் இருந்து காட்டு விலங்குகளும், ஊர்வனவும் தமது கிராமத்திற்கு வருவதாகவும், இதனால் தாம் இரவு நேரங்களில் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர். (160)

## முஸ்லிம்களுக்கு...

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போலி பிரசாரங்களை நிறுத்து, மீண்டும் புலிகளின் மறுபிறப்பை அரசாங்கமே தடைசெய், ஜனாதிபதியே முஸ்லிம்களை பார் போன்ற வாசகங்கள் கொண்ட பதாதைகளை ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தி நின்றனர்.

இறுதியாக ஜனாதிபதிக்கு தமது கோரிக்கைகளை அடங்கிய மகஜரொன்றை அனுப்புவதென்றும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அப்துல் சத்தார், குருநாகல் பிரதேச சபை உறுப்பினர் கே.எம். அமான், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கிற்கு...

லாளர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் ஏற்கனவே சந்தித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்து தற்போதைய நிலைமைகள் குறித்து நேரில் அறிந்து கொண்டனர்.

இந்த விஜயத்தின் ஒரு கட்டமாக அவர்கள் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஷான் விஜய விக்ரமவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பானது கிழக்கு மாகாண ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவினருக்கு காணொலியொன்றும் காண்பிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களின் விஜயம் அமைந்திருந்தது.

இலங்கைப் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பிரித்தானி யாவிற்கும், பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கும் விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிடுவது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வலுவடைகிறது...

உறவுகளை மேம்படுத்தும் வகையில், பொறியியல் துறைக்கான உற்பத்தி மற்றும் வாகன உதிரிப்பாக துறைக்கான பயிற்சி நிலையமொன்றை திருகோணமலையில் நிறுவ திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம், இலங்கையர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை இத்துறையில் வழங்க முடியும் என்றார்.

இந்தத் திட்டத்துக்கு இலங்கை அரசும், இந்திய அரசும் இணைந்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. மேலும், இலங்கைக்கு இந்தியாவை சேர்ந்த மருந்தாக்கல் துறையை சேர்ந்த தூதுக்குழுவொன்று எதிர்வரும் 30 தினங்களுக்குள் வருகை தரவுள்ளது. இவர்கள் இலங்கையில் மருந்தாக்கல் உற்பத்தி மையமொன்றை நிறுவுவது குறித்து ஆராய்வர்.

கடந்த ஆண்டு இலங்கை யின் மிகப்பெரிய முதலீட்டாளர்களாக இந்தியா திகழ்ந்தது. தற்போது, தொடர்ந்து இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து முதலீட்டு திட்டங்கள் உள்வந்த வண்ணமுள்ளன. எனவே இருநாடுகளுக்கும் அனுகூலம் ஏற்படக்கூடிய வகையில், நாம் இலங்கையில் எமது முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவுள்ளோம் என ஆனந்த் சர்மா மேலும் தெரிவித்திருந்தார்.

நாம் வெளிநாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள இருமுக வர்த்தக உடன்படிக்கைகளின் மூலம் இரு நாடுகளுக்கும் அனுகூலங்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கையுடன் எமக்கு சுமூகமான வர்த்தக உறவுகள் காணப்படுகின்றன.

இலங்கை - இந்தியா புரிந்துணர்வு பொருளாதார பங்குடமை உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்கான நடவ டிக்கைகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு, விரைவில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது குறித்து இலங்கை பொருளாதாரத் துறையுடன் தொடர்புடைய அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து இறக்குமதிகள் இந்தியாவுக்கு மேற்கொள்ளப்பட்டு, இந்தியாவின் உற்பத்தி நிறுவனங்களுடன் அவை தொடர்புபடுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெறும் 3 நாள் த் இந்தியா ஷோ கண்காட்சியில் இந்தியாவின் உற்பத்திப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள், உணவு மற்றும் கலாசார பொருட்கள் போன்றன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சி நிகழ்வில் இந்திய - இலங்கை தொழில் உறவை வலுப்படுத்தும் வகையில், பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கிடையிலான ஒன்றுகூடல் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியாவின் முன்னணி நிறுவனங்களை சேர்ந்த 20 இற்கும் அதிகமான பிரதம நிறைவேற்று அதிகாரிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தியாவின் வர்த்தக துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவுடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, மற்றும் வர்த்தக துறை பிரமுகர்களான எஸ்.ஆர்.ராவ், ரஜீவ் கவுல், சந்திரஜித் பானர்ஜி ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய....

தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோரைக் காலை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பின்போது இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை கடந்த அத்துமீறல்களை எடுத்துக்கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இக்கோரிக்கையினைக் கவனத்தில் எடுத்த இந்திய அமைச்சர் ஆனந்த் சர்மா, இப்பிரச்சினைக்கு இருதரப்பினரினதும் உடன்பாட்டோடு விரைவில் தீர்வினைப் பெற்றுத்தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறுதியளித்தார்.

இதன்போது உரிய தீர்வினை எட்டுவதற்கு முன்பாக இந்திய கடற்றொழிலாளர்கள் விசைப்படகில் பயன்படுத்தும் மடிவலை மீன்பிடிமூலம் வடபகுதி கடல் வளங்கள் சூறையாடப்படுவதை உடனடியாக முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டபோது இவ்விடயம் தொடர்பாக தான் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாகவும் இந்திய அமைச்சர் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

## மூதூர் படுகொலை...

விசாரணைகளை உரியமுறையில் நடத்தும் கலாசாரம் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிக்கும் நிலைமை ஆரோக்கியமானதாக அமையாது என மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் போது இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என மீளவும் மனித உரிமை கண்காணிப்பகம் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தத்தின் போது உரிமை மீறல்களில் ஈடுபட்ட இரண்டு தரப்பினர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மக்கள்...

செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 4 சங்கிலிகள், 2 பிராஸ்லெட், ஒரு நெக்லஸ், ஒரு காப்பு என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர், பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த இவ்வூழியரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். (137)

## 'உதயன்'...

Action) ஒன்று தொடர்பில் Writ மனு கோர முடியாது. ஆனால் நிர்வாக நடவடிக்கை (Administrative action) தொடர்பிலேயே Writ மனு கோர முடியும் என்ற வாதமும் முன் வைக்கப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

மேற்படி விவாதங்களை சட்டமா அதிபரினூடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பத்தையும், தேதியையும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கோரியுள்ளார்.

மேலும் நீதிச்சேவை ஆணைக் குழுவின் அறிவுறுத்தலின்படி மேற்படி வழக்கு விசாரணைக்கென யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜாவிடம் வழக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் உதயன் ஆசிரியரினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட Writ மனு வலுவிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு ஆதரவாக சரத் என் சில்வா செயற்பட்டார்

## விக்கிலிக்ஸ் திடுக்கிடும் தகவல்

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாகவே ஆரம்பத்தில் செயற்பட்டார் என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த தகவலில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க சில சிரேஷ்ட உச்ச நீதிமன்ற நீதியரசர்களுக்கு வாய்ப்பு அளிக்காது சரத் என் சில்வாவை 1999 ஆம் ஆண்டு பிரதம நீதியரசராக நியமித்தார்.

சரத் என் சில்வா, சந்திரிகா ஆட்சியின் ஓர் கருவியாக செயற்பட்டதாகப் பொதுவாக விமர்சனங்கள் எழுந்திருந்தன.

எனினும், சந்திரிகாவின் ஓராண்டு பதவிக்காலம் இழப்பதற்கு சரத் என் சில்வா உச்ச நீதிமன்றில் அளித்த தீர்ப்பே காரணமாகும்.

2007 ஆம் ஆண்டு யூன் மாதம 27 ஆம் திகதி அமெரிக்கத் தூதரகத்தின் அப்போதைய பாதுகாப்பு விவகார அதிகாரி ஜேம்ஸ் ஆர். மூரினால் இந்தக் குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டது.

சரத் என் சில்வாவின் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் விமர்சனத் தகவல்களை வெளியிட்டிருந்தது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் மிக முக்கியமான பல சந்தர்ப்பங்களில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆளும் கட்சிக்கு சாதகமான தீர்ப்புக்களை வழங்கியுள்ளார்.

இவற்றில் மிகவும் முக்கியமான தீர்ப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாக பிரிக்கப்பட வேண்டும் என்ற தீர்பபாகும்.

எவ்வாறெனினும், சரத் என் சில்வா அண்மைக் காலமாக ஜனாதிபதிக்கு எதிரான தீர்ப்புக்களை வழங்கி வருவதாக ஜேம்ஸ் மூர் தனது குறிப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறிப்பாக கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கையை தடுத்தல் உள்ளிட்ட சில தீர்ப்புக்களை வழங்கியிருந்தார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட நீதியரசர் குழாமில் சரத் என் சில்வா அங்கம் வகிக்கவில்லை என்ற போதிலும் தீர்ப்பின் பின்னணியில் சரத் என் சில்வா செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெலிகொம் நிறுவனம் 25 வீத பங்குகளை மலேசியாவிற்கு விற்பனை செய்வதனை தடுத்தல், அரசாங்கத்திற்கு எதிராக டிரான் அலஸ் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளல், மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோரின் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஏற்றுக்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு அரசாங்கத்திற்கு சார்பற்ற தீர்ப்புக்களை வழங்கியிருந்தார்.

எவ்வாறெனினும், சரத் என் சில்வாவின் நீதிமன்ற நடவடிக்கைள் அரசியல் பின்னணியைக் கொண்டமைந்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் சரத் என் சில்வாவிற்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக முன்னாள் சட்டமா அதிபர் சிப்லி அஷிஸ் குற்றம் சுமத்தினார்.

சரத் என் சில்வா, நாட்டின் நீதவான்கள் மீது கடுமையான ஆதிக்கம் செலுத்தி வந்ததாகக் குறிப்பிட்டார். தற்போதைய பிரதம நீதியரசராக கடமையாற்றி வரும் ஷிராணி பண்டாரநாயக்கவை, சரத் என் சில்வா ஓரங்கட்ட முனைப்பு காட்டியதாக அஷீஸ் குற்றம் சுமத்தினார்.

சரத் என் சில்வா சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வு பெற்றுக்கொள்ளாவிட்டால், நாடாளுமன்றில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து அவரை பணி நீக்க ஜனாதிபதி திட்டமிட்டிருந்ததாக சிரேஷ்ட உச்ச நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபட்ட பெந்தியை மேற்கோள்காட்டி அமெரிக்க தூதரகப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஜேம்ஸ் மூர் குறிபபிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

## போக்குவரத்திற்கு உதவாத கேசாவில் வீதி

வண். வடமேற்கு, கேசாவில் வீதி பாவனைக்கு உதவாத அளவுக்கு மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. காங்கேசன்துறை வீதியில் இருந்து சிவப்பிரகாசம் வீதியூடாக வண். வடக்கிற்கு அப்பால் கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டைப் பகுதிகளைச் சென்றடையும் கேசாவில் வீதி முக்கியத்துவம் வாய்ந்த வீதியாக அமைந்துள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர், உத்தியோகத்தர், நோயாளர், வயோதிபர்கள் என்றில்லாமல் வாகனாதிகளும் இவ் வீதியைப் பயன்படுத்துவதால் அத்தனை மக்களும் வீதியை மிக விரைவாக செப்பனிட்டு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (68)

## அரசுடன் சங்கமிக்கும் தயாசிறி ஜெயசேகர

### அடுத்த நாடாளுமன்ற அமர்வில் தெரியும்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி அவர் எதிர்வரும் எட்டாம் அல்லது ஒன்பதாம் திகதிகளில் அவர் அரசாங்கத்துடன் இணைந்துக் கொள்வார் என கூறப்படுகிறது.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர வெளிநாட்டு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் தயாசிறிக்கும், அரசாங்கத்தின உயர்மட்டக் குழுவினருக்கும், அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது தொடர்பில் முக்கிய சந்திப்பு ஒன்று கடந்தவாரம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித்தலைவர் சஜீத் பிரேமதாஸ கடந்த தினம் ஒன்றில் கருத்து வெளியிடும் போது, கட்சியில் காணப்படுகின்ற உட்பூசல்களுக்கு, கட்சியினுள் தீர்வு காணாமல், அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் உறுப்பினர்களை தாம் வெறுப்பதாக குறிப்பிட்டிருந்தார்.




| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 20 | 12 | 9 | 41 |
| 2 | அமெரிக்கா | 18 | 9 | 10 | 37 |
| 3 | தென்கொரியா | 8 | 2 | 5 | 15 |
| 4 | பிரான்ஸ் | 7 | 5 | 6 | 18 |
| 5 | பிரித்தானியா | 6 | 6 | 7 | 19 |
| 6 | ஜேர்மனி | 5 | 8 | 6 | 19 |
| 7 | இத்தாலி | 4 | 5 | 2 | 11 |
| 8 | வடகொரியா | 4 | 0 | 1 | 5 |
| 9 | கஸகஸ்தான் | 4 | 0 | 0 | 4 |
| 10 | ரஷ்யக் கூட்டமைப்பு | 3 | 9 | 8 | 20 |
| 11 | நியூசிலாந்து | 3 | 0 | 2 | 5 |
| 12 | தென் ஆபிரிக்கா | 3 | 0 | 0 | 3 |
| 13 | ஜப்பான் | 2 | 8 | 11 | 21 |

## மாகாண சபைத் தேர்தல் விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசபிரியவிற்கும் அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் இடையே நேற்று தேர்தல்கள் செயலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் உரையாற்றிய மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்ணாயக்க கருத்து தெரிவிக்கையில், பெருந தோட்ட சமூகத்தவர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்கான வசதிகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக பெருந்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கருத்தும் பெறப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கருத்து தெரிவிக்கையில்,

மலையக மக்கள் முன்னணியினால் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது அந்த வேண்டுகோளில் மலையக தோட்ட தொழிலாளர்கள் நேர காலத்துடன் வாக்களிபதற்கு வசதிசெய்து கொடுககப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த பரிந்துரையை தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக கொண்டுள்ளார். நாங்களும அதற்கு ஆதரவை வழங்க தயாராக உள்ளோம். தொழிலாளர்கள தமது வாக்குகளை பதிவு செய்த தன் பின்னர் தமது வழமையான பணிகளை மேற்கொள்ளலாம்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அ[illegible] நாயக்க இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், தேர்தல்கள் ஆணையாளர் இந்த தேர்தல்களை நம்பத்தகுந்த வகையில் நடத்துவத்துவதற்கு குறித்து பிரஸ்தாபித்தார.

தேர்தல்கள் ஆணையாளர் சகல அரசியல் கட்சிகளுக்கும் பல்வேறு பணிப்புரைகளை விடுததுள்ளார். இந்த தேர்தல் தொடர்பான நம்பிக்கையினை சகல தரப்பினருக்கும் ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. வாக்கு பெட்டிகளின் பாதுகாப்பு குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில் தேர்தல்கள் சட்டங்கள் மீறப்படுவது குறித்து, தேர்தல்கள் ஆணையாளரு[illegible] அறிவிக்க உள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துநெத்தி தெரிவித்துள்ளார்.



## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



அமரர்

**திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா**

21.07.2012 அன்று சிவப்பேறடைந்த எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய நடைபெறும் பஜனையும், பிரார்த்தனையும் 05.08.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் (மதியபோசனமும்) இடம்பெறும்.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தயவுடன் வேண்டுகிறோம்.

203, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மச்சாள்.

(C/1701)


## நாடு திரும்பினார் துமிந்த நான் அமைதியாக இருக்கமாட்டேன்



நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளார் என தான் கேள்விப்பட்டுள்ளதாக பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

துமிந்த சில்வா மீண்டும் வந்துள்ளார் என எனக்கு தகவல்கிடைத்துள்ளது. அவர் எப்போது வந்தார் என்பது சரியாகத் தெரியவில்லை. நேற்று முன்தினமிரவு வந்தார் என சிலர் கூறுகின்றனர். இரு வாரங்களுக்கு முன்னர் வந்திருக்கலாம் என வேறு சிலர் கூறுகின்றனர். அவர் வந்தவுடன் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். ஆனால இன்னும் அவர்கள் அதை செய்யவில்லை என ஹிருணிகா கூறினார்.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனுக்கு தான் அறிவித்துள்ளதாகவும் துமிந்த வந்தவுடன் கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறித்து சுட்டிக்காட்டியதாகவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஹிருணிகாவின் அடுத்த நடவடிக்கை என்னவென வினவிய போது, நான் அமைதியாக இருக்கமாட்டேன். அவரை கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மற்றொரு உத்தரவை பெறுவதற்கு நான் முயற்சிப்பேன். மேலதிக நடவடிக்கை குறித்து எனது சட்டத்தரணியுடன் கலந்துரையாடுவேன் என அவர் கூறினார்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.